பக்கங்கள்:13 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 தை 14 வியாழக்கிழமை 27.01.2022 கதிர் 83

### இது ரகசியம் அல்ல!

இந்தியாவின் 73ஆவது குடியரசு தினம் நேற்றாகும். அதை ஒட்டிய ஒன்று கூடல் ஒன்றை நேற்றிரவு யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகம் ஏற்பாடு செய்திருந்தது. யாழ்.நகரத்தில் நட்சத்திர விடுதி ஒன்றில் நிகழ்வு நடந்தது. ☞2

# சம்பிக்கவின் திட்டம் எனக்குத் தெரியாது; நான்தான் அடுத்த ஜனாதிபதி வேட்பாளர்



## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் திட்டவட்டம்

நான்தான் எதிரணியின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளர். அடுத்த தடவை ராஜபக்ஷக்களில் ஜனாதிபதி வேட்பாளராக யார் களமிறங்கினாலும் நான் தோற்கடித்தே தீருவேன்.

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி ஊடாகப் போட்டியிட்டு நாடாளுமன்றத்துக்குத் தெரிவான முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க 43ஆம் படையணி எனும் அரசியல் இயக்கத்தை உருவாக்கி அடுத்த ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்துச் செயற்படுகின்றார் என அரசியல் வட்டாரங்களில் கதை அடிபடுகின்றது. இது தொடர்பில் சஜித் பிரேமதாஸவிடம் ஊடகங்கள் நேற்று வினவிய போதே ☞12

# அரச கைக்கூலிகளுக்கு இடமளிக்க வேண்டாம்!

## தமிழ் மக்களிடம் ரெலோ கோரிக்கை




இந்தியாவை நோக்கிய கோரிக்கையின் வழியாக இலங்கை அரசின் இனவழிப்புக்கு எதிராகத் தந்திரோபாய நகர்வை தமிழர் தரப்பு ஒருமித்த பலத்துடன் மேற்கொண்டுள்ளது. இதற்கு எதிராகப் போராட்டத்தை நடத்தி, தமிழர் தரப்பைக் காட்டிக்கொடுக்கும் நடவடிக்கையில் ஈடுபடும் அரசின் கைக்கூலிகளின் நடவடிக்கைகளுக்கு இடமளிக்காதீர்கள்.

–இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோ, தமிழ் மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளது. ☞2

## அமைச்சர்கள் உடனே பதவி விலகவேண்டும்

### கபீர் ஹாசீம் வலியுறுத்து



தற்போதைய சூழ்நிலையில் அரச அதிகாரிகள் ☞2

## 19 பொலிஸாருக்கு கொரோனா உறுதி

கண்டி – பன்வில பிரதேசத்தில் 19 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனச் சுகாதார அதிகாரிகள்தெரிவித்துள்ளனர்.

தொற்றுக்குள்ளான அதிகாரிகள் ☞2

## வவுனியாவில் நீதி அமைச்சின் நடமாடும் சேவைக்கு எதிர்ப்பு

### காணாமல்போனோரின் உறவுகள் மாவட்ட செயலகத்துக்குள் நுழைய முற்பட்டதால் பதற்றம்



(வவுனியா நிருபர்)

வவுனியா, ஜன. 27

வவுனியாவில் நீதி அமைச்சின் நடமாடும் சேவைக்கு எதிராக காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. ஆர்ப்பாட்டக்காரர்கள் மாவட்ட செயலக வளாகத்துக்குள் நுழைய முற்பட்டதால் பதற்ற நிலை ஏற்பட்டதுடன், பொலிஸார் குவிக்கப்பட்டு முறுகல் நிலை உருவானது.

(விரிவான செய்தி 11ஆம் பக்கத்தில்...)

## கொடுங்கோல் ஆட்சிக்கு விரைவில் முற்றுப்புள்ளி

### சஜித் நேற்று சூளுரை



ராஜபக்ஷக்களின் கொடுங்கோல் ஆட்சிக்கு விரைவில் முடிவுகட்டும் நிலைக்கு நாட்டு மக்கள் வந்துள்ளனர் என்று எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான ☞12



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்ச்சியில் குறிப்பிடத்தக்க விடயம் அதற்குப் பிரதம விருந்தினர் வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம் என்பதுதான்.

வடக்கு ஆளுநர் இருக்க, அவைத் தலைவரை இந்தியத் தரப்பு பிரதம விருந்தினராக அழைத்து கௌரவித்தமையில் உள்நோக்கமும் இருப்பதாக நிகழ்ச்சியில் பங்குபற்றிய சில அரசியல் வட்டாரங்கள் பேசிக் கொண்டன.

பிரதம விருந்தினர் சிவஞானம், தமது உரையில் இந்திய அமைதிப்படையின் கால நினைவுகளையும் மீட்டார். அப்போது இந்தியத் தரப்பில் விடயங்களைக் கையாண்ட தூதுவர் ஜே.என்.டிக்ஸிற்றுக்கு, கொழும்பில் உள்ள தூதரகத்தில் பூரியும், அவருக்கு அடுத்த நிலையில் இருந்த ஜெயசங்கர் போன்ற அதிகாரிகளும் அளித்த பங்குபணியைக் குறிப்பிட்டார். அவ்வளவு தூரம் விடயத்தில் ஒன்றித்துப் பணியாற்றிய - தமிழகத் தமிழரான - ஜெய்சங்கர்தான் இன்று இந்தியாவின் வெளியுறவு அமைச்சர், அவருக்கு இலங்கைத் தமிழர்களின் நிலைமை பூரணமாகத் தெரியும். நாங்கள் எதுவுமே அவருக்குப் புதிதாகக் குறிப்பிடத் தேவையில்லை என்ற சாரப்பட சிவஞானத்தின் பேச்சு அமைந்தது.

அது வல்ல விடயம், அதையும் தாண்டி ஒரு விவகாரம் உண்டு. சிவஞானம் குறிப்பிட்ட மற்றைய அதிகாரி ஹார்தீப் சிங் பூரி. அச்சமயத்தில் தூதரக அதிகாரியாகப் பணியாற்றிய ஜெய்சங்கருக்கு, அதே தூதரகத்தில் சிரேஷ்ட நிலையில் இருந்தவர் இவர். சுதுமலை அம்மன் கோவில் அருகே இந்திய ஹெலியில் வந்திறங்கி, தலைவர் பிரபாகரனை இந்தியாவுக்குக் கூட்டிச் சென்றவர் இந்த பூரிதான். அவரும் இப்போது மோடியின் அரசில் எரிபொருள், எரிவாயு, வீடமைப்பு, நகராட்சி அமைச்சராக உள்ளார். இந்திய அரசில் முக்கிய பொறுப்பு இது.

எனினும், இலங்கை விடயங்களைக் கையாண்டதில் ஜெய்சங்கருக்கு இவர் 'சீனியர்'.அதிகம் தெரிந்தவர்.

வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரின் அனுசரணையோடு, இலங்கை விடயத்தை நேரடியாகக் கையாளும் பொறுப்பு, இலங்கை விடயத்தில் அத்துப்படியான ஹர்தீப் சிங் பூரியிடம் கையளிக்கப்படலாம் எனப் புதுடில்லி வட்டாரங்களில் பேச்சு அடிபடுகின்றது.

இந்திய தேசியப் பாதுகாப்பு ஆலோசகரின் வலது கையான ஆர்.என். ரவி, இப்போது தமிழக ஆளுநர். அத்தோடு ஜெய்சங்கருக்கு மேலதிகமாக இலங்கை விடயத்தில் அதிக அனுபவம் கொண்ட பூரியும் இதற்குள் இழுக்கப்படுகின்றார்.

ஏதோ வியூகம் வகுக்கப்படுவதாகவே எனக்குத் தோன்றுகின்றது.

மீண்டும் முன்னர் குறிப்பிட்ட ஒரு விடயத்தை நினைவூட்ட விரும்புகிறேன். 1987 இல் இலங்கை விவகாரத்தை ஒட்டிக்கட்டவிழ்ந்த இந்தியநடவடிக்கைகள் போன்ற சூழலே திரும்பவும் கருக் கட்டுகின்றது என நான் அண்மையில் சுட்டிய விடயம்தான் அது. மீண்டும் அதனை வாசகர்களுக்கு நினைவூட்டுகிறேன். விடயங்கள் அத்தகைய திசையில்தான் நகருகின்றன போலும்.

★ ★ ★

சில சமயங்களில் உண்மைச் செய்திகளையும் கிசுகிசுக்களாக எழுத வேண்டிய கட்டாயம் நமக்கு. அப்படி ஒன்று இது.

தென்னிலங்கை அரசியல் தலைமைகளைப் பற்றிப் பிடித்து, கெஞ்சிக் கூத்தாடி, அடுத்தடுத்து இரண்டு பதவிகளைக் கைப்பற்றிக் கொண்ட மும்மொழி வல்லாளர் அவர். அவருக்கு ஊரெழுவில் ஒரு வலது கை.

இரண்டு பேரும் அங்கு ஒரு வீட்டுக்கு வேளை கெட்ட வேளையில் மெய்ப்பாது காவலர்களும் இன்றி அடிக்கடி போய் வருகின்றமையை ஊர்ப் பட்டாளம் கவனித்திருக்கின்றது.

அண்மையில் அப்படி அவர்கள் வீட்டுக்குப்போய்சற்று நேரத்தில் ஊர்க்கூட்டம் அதிரடியாக வீட்டைச் சுற்றி வளைத்திருக்கின்றது. இளைஞர் பட்டாளத்தின் பாய்ச்சலை அடுத்து வீட்டுக்குள் இருந்த அரசியல்வாதியும், உதவியாளரும் சரமும் கையுமாக வெளியே ஓடி வந்து வீதியில் நின்ற ஆட்டோவில் தலை தப்பினது தம்பிரான் புண்ணியம் என்று பறந்து விட்டனர்.

இருவரும் அவசரமாக சரத்தைப் சுற்றிக் கொண்டு எழுந்து ஓடும் நிலைமைக்குத் தள்ளப்பட்ட விடயம்தான் இப்போது வடக்கில் முக்கிய அரசியல் தரப்புகள் மட்டத்தில் பிரதான பேசு பொருள்.

ஓர் அடிக்குறிப்பு. இந்தச் சம்பவத்துக்கும் நான் வழமையாகக் கூறும் அமுல்பேபிக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. தயவு செய்து அவருடன் இதனைத் தொடர்புபடுத்திப் பார்க்க வேண்டாம்.

– மின்னல் –

---

## அரச கைக்கூலிகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் ரெலோ நேற்று விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

மாகாண சபை முறைமையை முற்று முழுதாக நீக்கி தமிழர்களைப் பலம் அற்றவர்களாக ஆக்குவோம் என்ற சபதத்தோடு அரச கட்டளை ஏறியவர் இன்றைய ஜனாதிபதி. புதிய அரசியல் யாப்பின் மூலம் அதை நிறைவேற்றத் தயாராகி வருகின்றார்.

'ஒரே நாடு – ஒரே சட்டம்' என்ற செயலணியின் தலைவர் ஞானசார தேரர் மாகாண சபை முறையை அழித்து ஒழித்து தமிழர்களுக்கு இருக்கும் ஆக்க குறைந்த அதிகார முறைமையை நீக்குவோம் என்ற செயற்பாட்டை முன்னெடுத்து வருகின்றார்.

அமைச்சரவை அந்தஸ்துடன் இந்தியாவுக்கான தூதுவராகச் சென்ற மிலிந்த மொரகொட தமிழர்கள் அரசியல் தீர்வைக் கோரவில்லை அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளைத் தீர்க்கக் கோருகின்றார்கள் என்று கூறி வருகின்றார். மாகாண சபை முறைமை ஒரு வெள்ளை யானைக்கு ஒப்பானது என்று இந்தியாவிலே தெரிவித்து வருகின்றார்.

வியத்மக என்ற சிங்களப் புத்திஜீவிகள் அமைப்பு மாகாண சபை முறைமையை ஒழித்துக்கட்டி தமிழர்களை எமது தாயக பூமியிலேயே அரசியல் பலம் அற்றவர்களாக ஆக்க முயற்சி செய்கின்றார்கள். மகா சங்க பௌத்த பிக்குகள் இதே திசையிலே பயணிக்கின்றார்கள்.

13ஆவது திருத்தச் சட்டம் எமது அரசியல் தீர்வு அல்ல என்பதை நாம் தெட்டத் தெளிவாகக் கூறியுள்ளோம். நிரந்தரமான அரசியல் தீர்வை நாம் எட்டும் வரையும் மாகாண சபை முறைமை அரசியல் யாப்பில் இருப்பது அவசியமாகும். இதை நீக்கிவிட்டாலோ அல்லது பலவீனமாக்கினாலோ தமிழர் இருப்பே இந்த நாட்டில் கேள்விக்குறியாகிவிடும். இதை நாம் ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

மாகாணசபையின் அடித்தளமாக இருக்கும் 13ஆவது திருத்தச் சட்டத்தை நீக்குவதே இதற்கு ஒரே வழி என்ற வகையில் பேரினவாத தென்னிலங்கை சிங்கள அரசு பிரசாரத்தை முன்னெடுத்து வெற்றியும் கண்டு வருகின்றார்கள்.

இதற்கு வலுசேர்க்கும் விதமாக எமது தமிழ் இனத்திலேயே தேசியவாதிகள் என்ற போர்வையோடு இயங்கும் அரச கைக்கூலிகள் 13 எதிர்ப்பு என்று ஒரு போராட்டத்தை அரசின் கனவுகளை நிறைவேற்றுவதற்குச் சாதகமாகச் செயற்படுகின்றார்கள். இவர்களைத் தமிழ் மக்கள் அடையாளம் கண்டு நிராகரிக்க வேண்டும்.

தமது அரசியல் கொள்கைக்கான எந்தப் பாதையையும் வகுக்க முடியாத இவர்கள், இதுவரையும் எந்த நகர்வையும் மேற்கொள்ளாதவர்கள். தமிழர்கள் ஒருமித்து முன்னெடுக்கும் செயற்பாடுகளை விமர்சிப்பதையே அரசியலாகக் கொண்டுள்ளார்கள்.

இவர்கள் ஒற்றையாட்சியை எதிர்க்கின்றோம் என்று கூறிக்கொண்டு அதன் கீழுள்ள பிரதேச சபைகளில் பதவிகளைப் பெற்றுக்கொண்டவர்கள், ஒற்றையாட்சியை ஏற்று சத்தியப் பிரமாணம் செய்து நாடாளுமன்றப் பதவிகளை அலங்கரித்துக் கொண்டவர்கள் எதிர்க்கிறோம் எனக் கூறும் 13இல் உள்ள மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடத் தயாராகி வருபவர்கள். இரட்டைவேடம் போடும் இவர்களை மக்கள் அடையாளம் கண்டு கொள்ள வேண்டும்.

இவர்களால் தமிழ் மக்களுக்கு எந்த விதமான தீர்வையோ விடிவையோ பெற்றுத்தர முடியாது. தமது அரசியல் கையாலாகாத நிலையை மக்கள் அடையாளம் கண்டுவிட்டார்கள் என்பதால் வெற்றுக் கோஷங்களின் மூலம் எம்மக்களை ஏமாற்ற முயலுகிறார்கள். போராட்டத்துக்காக ஒரு துளி வியர்வை கூடச் சிந்தாதவர்கள் உயிரிழந்த போராளிகளையும் மக்களையும் தமது ஈனச் செயல்களுக்குப் பயன்படுத்துகின்றார்கள். அந்தப் புனித ஆத்மாக்களின் தியாகங்களைத் தமது சுயலாப அரசியலுக்காக விலைபேசுகின்றார்கள்.

தமிழர்களுக்கான அரசியல் தீர்வை வேண்டி போராட வேண்டிய தேசியவாதிகள் என்று கூறிக் கொள்பவர்கள் தமிழர்களுக்கு எதிராகவே ஒரு போராட்டத்தை தாயக பூமியில் நடத்துவதற்குத் தமிழ் மக்கள் ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது.

ஏற்கனவே அரசின் முகவர்கள் பலர் சிறு குழுக்களாக நின்று தேசியத்துக்கு எதிரான கருத்துக்களைத் தெரிவித்து வருவதை நீங்கள் அறிவீர்கள். அதே பாதையில் தேசியவாதிகள் என்ற போர்வையைப் போர்த்திக்கொண்டு தமிழின எதிர்ப்பு என்னும் அரசின் நிகழ்ச்சி நிரலை சிரமேற்கொண்டு அரசின் கனவுகளை நிறைவேற்றும் இந்தக் கைக்கூலிகளை நிராகரித்து, தமிழரின் ஒற்றுமையை பேரினவாத அரசுக்கும் சர்வதேசத்துக்கு தெரிவிக்குமாறு தமிழ் மக்களை வேண்டிக்கொள்கின்றோம் – என்றுள்ளது.

---

# இலங்கையில் ஒரே நாளில் 927 பேருக்குக் கொரோனா

## மீண்டும் அதிகரிக்கும் தொற்று

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று உறுதியான மேலும் 927 பேர் நேற்றுஅடையாளம்காணப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 6 இலட்சத்து 4 ஆயிரத்து 581 ஆக அதிகரித்துள்ளது.

இவர்களில் 12 ஆயிரத்து 454 பேர் சிகிச்சை நிலையங்களில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 241 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

இதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 76 ஆயிரத்து 781 ஆக அதிகரித்துள்ளது.

## 16 பேர் மரணம்

நாட்டில் மேலும் 16 கொரோனா மரணங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல்திணைக்களம் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 15 ஆயிரத்து 346 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உறுதிப்படுத்தப்பட்ட 16 மரணங்களில் 8 பெண்களும், 8 ஆண்களும் உள்ளடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

## அமைச்சர்கள் உடனே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அல்லர், அமைச்சர்களே பதவி விலக வேண்டும். எனவே, அனைத்து அமைச்சர்களும் உடனடியாகப் பதவி விலக வேண்டும்.

–இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசீம் வலியுறுத்தினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் நேற்று அவர் மேலும் கூறியதாவது:–

இந்த நாட்டில் எவ்வளவு எரிபொருள் கைவசம் உள்ளது, எப்போது மின்சாரம் துண்டிக்கப்படும் உள்ளிட்ட தகவல்களைத் தொழிற்சங்கப் பிரமுகர்களே நாட்டுக்குத் தெளிவுப்படுத்தி வருகின்றனர். அமைச்சர்கள் மௌனம் காக்கின்றனர். அவர்களுக்கு வெட்கம் இல்லை. எனவே, பதவி விலக வேண்டியது அரச அதிகாரிகள் அல்லர், அமைச்சர்களே என்பதைக் கூறிவைக்க விரும்புகின்றோம் – என்றார்.

அதேவேளை, இந்த அரசுக்கு நாட்டில் என்ன நடக்கின்றது எனத் தெரியவில்லை. மக்களிடம் தியாகம் செய்யுமாறு கோருகின்றனர். நாட்டை நிர்வகிக்க முடியாத அரசு, ஏன் பதவியில் இருக்க வேண்டும் – என்று ஜே.வி.பி. நேற்று சுட்டிக்காட்டியுள்ளது.

---

## 19 பொலிஸாருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இப்பகுதியில் கொரோனா பரவும் அபாயம் அதிகமாக உள்ளதால், இதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் எனவும் சுகாதாரத்துறை அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர்.




# சுகாதார ஊழியர்கள் பணிப்பகிஷ்கரிப்புப் போராட்டம் கொழும்பு நகர மண்டபப் பகுதியில் வாகன நெரிசல்!



கொழும்பு நகர மண்டப வளாகப் பகுதியில் நேற்று (புதன்கிழமை) கடும் வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளது.

சுகாதார ஊழியர்களின் போராட்ட பேரணி காரணமாக இவ்வாறு வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேல் மாகாணத்தில் உள்ள வைத்திய சாலைகளின் தாதியர்கள், பொது சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் குடும்பநல வைத்திய அதிகாரிகள் ஆகியோர் பணிப்புறக்கணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

அதன்படி, பதவி உயர்வு உள்ளிட்ட 7 கோரிக்கைகளை முன்னிறுத்தி நேற்று (புதன் கிழமை) காலை முதல் 24 மணிநேர அடையாள பணிப்புறக்கணிப்பை அவர்கள் முன்னெடுத்துள்ளனர்.

பதவி உயர்வில் காணப்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக சுகாதார அமைச்சரால் அமைச்சரவை அனுமதி பெறப்பட்டதாகவும் எவ்வாறாயினும் குறித்த அமைச்சரவை அனுமதியில் காணப்பட்ட பிரச்சினை காரணமாக 13 ஆயிரம் தாதியர்களுக்கான பதவி உயர்வு இல்லாமல் போயுள்ளதாகவும் சுகாதாரத் துறையினர் குற்றஞ்சாட்டுகின்றனர்.

குறித்த கோரிக்கைகளை முன்னிறுத்தி அவர்கள் இதற்கு முன்னரும் பணிப்புறக்கணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.


## VACANCIES
## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
### FACULTY OF TECHNOLOGY

University of Jaffna will entertain applications from the qualified persons for the post of Senior Lecturer Grade I/ Senior Lecturer Grade II/ Lecturer (unconfirmed)/ Lecturer (Probationary) in ***Biosystems Technology / **Engineering Technology.**

**Note:**

*For positions in **Biosystems Technology,** special consideration will be given to those who have degrees in Biosytems Technology or any other related degrees specialized in one or more of the following fields:
- Food production Technology, Food Science and Technology or Food Science
- Commercial Green farming Technology

**For positions in **Engineering Technology**, special consideration will be given to those who have degrees in Technology or Engineering, specialized in one or more of the following fields:
- Automobile Technology/ Mechanical Engineering
- Electro Technology/ Electrical & Electronic Engineering/ Automation Technologies.

Those who wish to apply are strongly advised to visit our University Website **www.jfn.ac.lk** for all the relevant details including remuneration package and statutory benefits.

**Closing date**
Application should reach us on or before **28.02.2022**

Application forms and other details will be available in the University website **www.jfn.ac.lk.** Applicants are requested to send the prescribed application form downloaded from the University website with the paid bank slip for the deposit of a sum of Rs.100/- credited to the Peoples Bank in favour of University of Jaffna **Collection Account Number: 970000090000387** of Bursar, University of Jaffna.

The candidates who apply for **more than one** post should submit **separate application** for each along with separate **bank slip**. The post applied for should be marked on the top left hand corner of the envelope.

Perfected applications shall be sent to the **Deputy Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri Lanka** under registered post with the photocopies of Statement of the Degrees and Service Certificates. **Submission of applications will not be entertained in person.**

Applicants from the University System/Government Departments / Corporations and Statutory Board should channel their applications through the Head of respective institutions, but may send an advance copy in the first instance. However, no such applicant will be considered for interview, if the application channeled through the Head of the Department is not received.

Applications and referee reports should be in the relevant format. Incomplete and illegible applications and applications received after the closing date will be rejected without intimation. Only short- listed applicants will be called for an interview.

**REGISTRAR**
**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA.**
**26.01.2022**


# பாகிஸ்தான் பிரதமருடன் அமைச்சர் பந்துல சந்திப்பு!



பாகிஸ்தானுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள வர்த்தக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன, பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கானைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

பாகிஸ்தான் பிரதமர் அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளதாக வர்த்தக அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை - பாகிஸ்தான் வர்த்தக உடன்படிக்கையை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள தொடர்ச்சியான கலந்துரையாடல்கள் மற்றும் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வது அவசியம் என பாகிஸ்தான் பிரதமர் இதன்போது தெரிவித்துள்ளார்.

பௌத்த சமூகத்தினர் பாகிஸ்தானுக்கு விஜயம் செய்வதை மேலும் மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு உத்தேசித்துள்ளதாக பாகிஸ்தான் பிரதமர் இந்தச் சந்திப்பின் போது தெரிவித்தார் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானுடனான கொடுக்கல், வாங்கல்களை மேலும் வலுப்படுத்துவதற்காக அந்நாட்டுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த தாம் உள்ளிட்ட வர்த்தக குழுவினருக்கு வழங்கிய வரவேற்பிற்கு வர்த்தக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன நன்றி தெரிவித்துள்ளார்.

# பத்தனை மவுண்ட்வேர்ணன் தோட்டத்தில் லொறி விபத்து




திம்புள்ள - பத்தனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மவுண்ட்வேர்னன் தோட்டத்தில் தேயிலை கொழுந்து ஏற்றிச் செல்ல பயன்படுத்தப்பட்ட லொறி ஒன்றின் சாரதி நேற்று (புதன்கிழமை) மாலை 3 மணியளவில் அதே இடத்தில் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

டிக்கோயா இன்ஜஸ்ட்ரி தோட்டத்தில் வசித்த 38 வயதான கருப்பையா கார்த்திகேசன் என்ற ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் மவுண்ட்வேனன் தோட்டத்தில் தேயிலை கொழுந்து நிறுவை செய்யும் இடத்தில் லொறியை விட்டு இறங்கிய போது லொறி ஒரு பக்கத்துக்கு சாய்வதை அவதானித்துள்ளார்.

லொறியில் ஒரு பக்கத்துக்கு மாத்திரம் கொழுந்து ஏற்றப்பட் டதால் லொறி சமநிலையின்றி சாயத் தொடங்கியுள்ளது.

இதனையடுத்து உடனடியாக லொறி சாய்வதை நிறுத்த முற்பட்ட போது லொறி அவர் மீது சாய்ந்துள்ளது. இதன் காரணமாகவே அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவரின் சடலம் கொட்டகலை வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதோடு, பிரேத பரிசோதனைகளின் பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இந்த விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை திம்புள்ள பத்தனை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## மீள முடியாத நிலையை நோக்கி

நாட்டின் பொருளாதார நிலைமை குறித்து வெளிவரும் குழப்பமான செய்திகள் மக்கள் மத்தியில் எதிர்காலம் குறித்து பயத்தையும் பதற்றத்தையும் ஏற்படுத்தியிருப்பது கண்கூடு.

ஒரு புறம் நாட்டின் அந்நிய செலாவணிக் கையிருப்பு முற்றாகக் கரைந்து விட்டது. கொழும்புத் துறைமுகத்துக்கு அத்தியாவசியப் பொருள்களுடன் வந்து சேர்ந்த பல நூறு கொள்கலன்கள் உரிய கொடுப்பனவை வழங்குவதற்கு அரசிடம் அந்நிய செலாவணி இல்லாத நிலையில் தேங்கிக் கிடக்கின்றன.

'பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும்' என்ற மாதிரி பொருளாதார நெருக்கடிகளைச் சமாளிக்கும் நோக்குடன் அந்நிய செலாவணி நடவடிக்கைகளைக் கையாவதற்கு அரசு கொண்டு வந்த கட்டுப்பாடுகளே, 'பூமராங்' ஆகி நாட்டின் அந்நிய செலாவணி வருவாயை பெரிதும் பாதித்து நிற்கின்றது. ரூபாவுக்கு எதிரான டொலரின் பெறுமதியை மிதக்க விடாது, அரசு செயற்கை மட்டத்தில் கட்டாயப்படுத்திப் பேணுவதால், அந்நிய செலாவணி மாற்றீடுகளை பலரும் தவிர்த்து வருகின்றனர்.

அதனால், நம்மவரால் வெளிநாட்டில், வெளிநாட்டுக் கரன்ஸியில் உழைத்துப் பெறப்பட்ட – அல்லது ஈட்டப்பட்ட – வருமானம் கூட இங்கு வருவதில்லை. அரசு செயற்கைத் தனத்தில் பேணும் அந்நிய செலாவணிப் பெறுமதிக்கு அமைய தங்கள் வெளிநாட்டு உழைப்பை உள்ளூர் ரூபாவுக்கு மாற்றி நஷ்டமடைய பொதுமக்களுக்கு விருப்பம் இல்லை. அதனால் தங்கள் உழைப்பை – வருமானத்தை – வெளிநாட்டுக் கணக்கிலேயே சேமிக்கும் போக்கை அவர்கள் நாடத் தொடங்கி விட்டனர். அதையும் மீறித் தேவை ஏற்படும் போது, தனிப்பட்ட உண்டியல் போன்ற – தனியார் முறைகள் மூலம் – அந்தப் பணத்தை மாற்றி, உள்நாட்டில் பெற்றுக் கொள்கின்றார்கள். இதனால் இதுவரை காலமும் வழமையாக ஈட்டி வந்த அந்நிய செலாவணி சேமிப்பு இப்போது எட்டாக் கனியாகி வருகின்றது.

இதேசமயம் உள்நாட்டில் தனது கொடுப்பனவுக் கடப்பாடுகளை நிறைவேற்ற முடியாத அரசு, நெருக்கடியைச் சமாளிப்பதற்கு கண்மூடித்தனமாக பணத்தை அச்சிட்டு புழக்கத்துக்கு விட்டுத் தள்ளுகின்றது.

புத்தாண்டு பிறந்த பின்னர் கடந்த திங்கட்கிழமை வரை 14 ஆயிரத்து 600 கோடி ரூபா பண நோட்டுகள் புதிதாக அச்சிட்டுப் புழக்கத்துக்கு விடப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டு ஜனவரி 18, 20 மற்றும் 24ஆம் திகதிகளில் புழக்கத்துக்கு விடப்பப்பட்ட பண நோட்டுகள் இவை.

இவ்வாறு கண்மண் தெரியாமல் பணநோட்டுக்களை அச்சிட்டுப் புழக்கத்துக்குத் தள்ளி, அதன் மூலம் அன்றாட நெருக்கடியை சமாளிக்கும் கைங்கரியத்தை அரசு தொடர்வதால், அதன் விளைவாக பண வீக்கம் எகிறுகின்றது. இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்கின்றது. ஆனாலும் அதைப் பொருட்படுத்தாமல், டொலருக்கு எதிரான ரூபாவின் பெறுமதியை தன்னிஷ்டப்படி செயற்கைத் தீர்மானத்தில் உயர் மட்டத்தில் பேணுகின்றது அரசு. நோட்டுக்களை அச்சிடும் இந்த நடவடிக்கையால் விலைவாசியும் உயர்ந்து செல்கின்றது.

இத்தகைய அசாதாரண பொருளாதார நெருக்கடியை முகம் கொண்டு மீளுவதற்கு இந்த அரசிடம் உருப்படியான திட்டமும் இல்லை. இயலுமையும் இல்லை. தொடர்ந்தும் எந்த நாட்டிடம் கடன் வாங்கலாம், எவ்வளவு ரூபா நோட்டுக்களை அச்சிட்டுப் புழக்கத்துக்கு விடலாம் என்று குறுகிய வழிகளில் மட்டுமே அரசு சிந்திக்கின்றது.

இத்தகைய விவேகமற்ற – தீர்க்கதரிசனமில்லாத – இந்த ஆட்சித் தலைமை, உடனடிப் பிரச்சினைகளைச் சமாளிக்கும் தனது தற்காலிக நடவடிக்கைப் போக்குகளினால் நாட்டின் பொருளாதார நிலைமைய மேலும் மேலும் மோசமாகப் பாதிக்க வைத்து, மீள முடியா இக்கட்டில் நாட்டை முழுமையாக மாட்டிவிடப்போகின்றது என்பதுதான் நிஜம்.

# ஓமானிடம் நாம் ஏன் கடன் பெறவில்லை?

## அரசு விளக்கம்



ஓமானிடம் ஏன் கடன் பெற்றுக் கொள்ளப் படவில்லை என்பது தொடர்பாக அரசாங்கம் அதிகாரபூர்வமாக விளக்கம் அளித்துள்ளது.

எரிபொருள் கொள்வனவு செய்யும் நோக்கில் அரசாங்கம், 3.6 பில்லியன் அமெரிக்க டொலர் கடனை ஓமானிடம் கோரியிருந்தது.

எனினும், ஓமானிய அரசாங்கம் விதித்த நிபந்தனைகளின் காரணமாக இந்தக் கடன் தொகையை அரசாங்கம் பெற்றுக்கொள்ளவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் டலஸ் அழப்பெரும இந்த விடயத்தை ஊடகங்களிடம் குறிப்பிட்டுள்ளார்.

அந்நிய செலாவணி நெருக்கடி நிலைமை காரணமாக கடந்த 2021 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் ஓமானிடம் கடன் பெற்றுக் கொள்ள அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தது.

கடனுக்கான வட்டியில் சலுகை வழங்குவதற்கு எண்ணெய் பற்றிய தேடுதல்களை மேற்கொள்ள ஓர் இடத்தை ஒதுக்கித் தருமாறு இலங்கையிடம் ஓமான் கோரியிருந்தது.

எனினும் இந்தக் கோரிக்கையை இலங்கை அரசாங்கம் நிராகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணத்தில் இரவில் ஏற்பட்ட விபத்தால் தெய்வாதீனமாக உயிர் தப்பிய வைத்தியர்கள்





யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட விபத்தொன்றில் வைத்தியர்கள் சிலர் தெய்வாதீனமாக தப்பினர் எனத் தெரிய வருகிறது.

அரியாலை மாம்பழம் சந்தியில் வேகக் கட்டுப்பாட்டை இழந்து அங்கிருந்த வீட்டு மதிலுடன் மோதி கார் ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது. யாழிலுள்ள ஹோட்டல் ஒன்றிலிருந்து சென்ற வைத்தியர்களின் வாகனமே இவ்வாறு விபத்துக்குள்ளாகி உள்ளது.

இரவு 12.45 மணியளவில் கிளிநொச்சி நோக்கி சென்று கொண்டிருந்த நிலையில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்தின் போது கார் கடுமையாகப் பாதிக்கப்பட்டதுடன், சிறு காயங்களுடன் வைத்தியர்கள் தப்பியுள்ளனர்.

காயமடைந்து மயக்கமடைந்த நிலையில் இருந்த ஒருவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

# குளிரூட்டிகள் மற்றும் மின் விசிறிகளை அணைக்குமாறு மக்களிடம் கோரிக்கை

நாடளாவிய ரீதியில் கடந்த சில நாள்களாக நிலவிவரும் தொடர் மின் தடை நெருக்கடி காரணமாக தேவையற்ற குளிரூட்டிகள் மற்றும் மின் விசிறிகளை அணைத்து விட்டு மின்சாரத்தை சேமிக்க நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு இந்த கோரிக்கையை விடுத்துள்ளது.

கடந்த சில தினங்களாக அனல் மின் நிலையங்களில் மின்சார உற்பத்திக்கான எரிபொருள் கிடைக்காத காரணத்தால் அனல் மின் நிலையங்களின் சேவை தடைப்பட்டிருந்ததுடன், மின்தடை நிலவி வரும் நிலையில், இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இன்று முதல் சனிக்கிழமை வரை மின்வெட்டுக்கான அவசியமில்லை என இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த 3 நாள்களில் மின்சாரம் தயாரிக்கப் போதுமான எரிபொருள் கையிருப்பில் உள்ளதாகவும், இந்த மாத இறுதிக்குள் இலங்கைக்கு மசகு எண்ணெய் கையிரு ப்பு கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதன் பிறகு மின் உற்பத்தி நிலையங்களுக்குத் தேவையான எரிபொருளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நுரைச்சோலை அனல்மின் நிலையத்தின் 3 ஆம் அலகின் மூலம் இம்மாத இறுதிக்குள் மீண்டும் மின் உற்பத்தியை ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும், தடையற்ற மின்சார விநியோகத்தை வழங்க முடியும் என்றும் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு நம்பிக்கை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# காலியில் மாணவி மீது சரமாரியான கத்திக்குத்து!

காலி – லபுதுவப் பகுதியில் உள்ள உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தில் பொறியியல் பிரிவில் கல்விகற்கும் மாணவி ஒருவர் மீது கத்திக்குத்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த சந்தேகநபர் கத்தியால் குத்திவிட்டு, அவரிடமிருந்து தொலைபேசியை பறித்துச்சென்ற நிலையில், சந்தேகநபரை அக்மீமன பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட நபர் 23 வயதுடைய தனமல்வில பகுதியைச் சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், மாணவியின் தொலைபேசியை கொள்ளையிட்டுச் சென்ற நபரை பொலிஸார் கைது செய்துள்ளதோடு சம்பவத்துக்காக பயன்படுத்திய கத்தியையும் மீட்டுள்ளனர்.

குறித்த சம்பவத்தில் காயமடைந்த மாணவி தற்போது கராப்பிட்டிய வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

குறித்த மாணவியும் தனமல்வில பகுதியில் வசித்து வருபவர் என்பதோடு, உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவகத்தில் பொறியியல் பிரிவில் கல்வி கற்று வருகிறார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், கைதான சந்தேகநபரை காலி நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தவுள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# தமிழர்களுக்கான அரசியல் தீர்வு சமஷ்டி ஆகவே இருக்கவேண்டும்!

## வினோ நோகராதலிங்கம் எம்.பி. திட்டவட்டம்



எமது அரசியல் தீர்வு சமஷ்டி முறையில் இருக்க வேண்டும் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் தெரிவித்தார்.

வவுனியா தமிழ் ஊடகவியலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் வவுனியா நகர சபை மண்டபத்தில் மறைந்த ஊடகவியிலாளர் சுகிர்தராஜனின் நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்ட போது அங்கு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அங்கு கருத்துத் தெரிவித்த அவர்-

தமிழ்த் தேசியத்தின் பால் பற்றுறுதி கொண்டு பல ஊடகவியலாளர்கள் உழைத்துக் கொண்டிருந்தபோது அது அரசாங்கத்தின் அரசியல் செயற்பாட்டுக்கு சர்வதேச ரீதியில் குந்தகத்தை ஏற்படுத்தும் என்பற்காக இவர்களை உயிரோடு விட்டுவைக்கக் கூடாது என்ற ஒரு நோக்கத்துக்காகவே பல ஊடகவியலாளர்கள் தொடர்ச்சியாகப் படுகொலை செய்யப்பட்ட வரலாற்றை நாம் கண்டுள்ளோம்.

அதன் ஒரு கட்டமாக விடுதலைப் புலிகளின் போராட்டம் இடம்பெற்றுக் கொண்டிருந்த காலகட்டத்திலே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற ஒரு கூட்டு அணியை ஆயுதப் போராட்டத்துக்கு சமாந்திரமாக பக்கபலமாக அரசியல் ரீதியான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியதன் அவசியத்தைக் கருத்தில் கொண்டு ஊடகவியலாளர்களே கூட்டமைப்பை உருவாக்கும் முயற்சியில் முதன்முதலாக ஈடுபட்டார்கள்.

சிவராம், நடேசன் இவர்களைப் போன்றவர்கள் தங்களை உயிர்த்தியாகம் செய்து இங்கு ஒரு நிரந்தரமான அரசியல் தீர்வுக்காக அல்லது நிரந்தரமான தமிழர்களின் விடிவுக்காகப் பரந்துபட்ட ஒற்றுமை முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இந்த வகையில் தமிழர்கள் ஓரணியில் திரள்வதற்குக் காரணம் இந்த ஊடகவியலாளர்கள் என்றால் அதற்கு மாற்றுக் கருத்துக் கிடையாது.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக்குள் பல்வேறு முரண்பாடுகள், பிரச்சினைகள், உட்கட்சி பிரச்சினைகள் இருந்தாலும் கூட தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு உயிரோடு இருக்கின்றது என்றால் தியாகம் மேற்கொண்ட ஊடகவியலாளர்களது அர்ப்பணிப்பு என்பரத எவரும் மறந்து விடக்கூடாது.

எனினும், ஊடகவியலாளர்களின் அர்ப்பணிப்பிலே தான் கூட்டமைப்புக்கான அத்திபாரம் இடப்பட்டது. ஊடகவியலாளர்களே அப்போது போராட்டத்தில் ஈடுபட்ட விடுதலைப் புலிகளுடன் பேசி இதனுடைய தேவையை அவர்களுக்கு உணர்த்தி அவர்களும் பேசி இந்தத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது.

எனினும் யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக்கும் ஊடகவியலாளர்களுக்கும் சம்பந்தம் இல்லை. விடுதலைப் புலிகளுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் சம்பந்தமில்லை என்கின்ற தோரணையில் எம்மில் சிலரால் பிரசாரமாகக் கொண்டு செல்லப்பபட்டதையும் நாம் பார்க்கின்றோம்.

இன்று ஊடகவியலாளர்கள் உண்மையை வெளிப்படுத்துவதற்குப் பெரும் அச்சுறுத்தலாக பாதுகாப்பு தரப்பினர்களும் அவர்களோடு சேர்ந்தியங்கும் புலனாய்வாளர்களும் இருக்கின்றனர். ஊடகவியலாளர்களது அறிக்கைகள் அரசாங்கத்தை ஆட்டம் காணச் செய்கின்ற வேளையில் ஊடகவியலாளர்கள் மீதான அடக்குமுறைகளும் கொலை மிரட்டல்களும் ஏற்படுத்தப்படுகின்றன.

இந்தத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கத்தில் முக்கிய பங்கேற்ற தலைவர்களாக தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன், தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தலைவர் சுரேஸ் பிறேமச்சந்திரன் ஆகியோரே இந்த ஊடகவியலர்களுடன் நெருக்கமான உறவைக் கொண்டிருந்து மிகப்பெரும் ஆலோசனை வழங்கி ஒற்றுமைப்பணி மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இன்று பாரதப் பிரதமர் மோடிக்கு எழுதிய கடிதம் உட்பட கடந்த காலத்தில் ஐ.நா. மனித உரிமை ஆணையாளருக்கு எழுதிய கடிதம் உட்பட பலவற்றுக்கு தமிழ்த் தேசியக் கட்சிகளை ஒற்றுமைப்படுத்தி அதன் மூலம் இன்றும் அந்த ஐக்கியத்தை மேற்கொள்ள முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அந்த முயற்சிகள் வெற்றி பெறும் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கின்றது.

கடந்த அரசாங்கம் போலவே இந்த அரசாங்கமும் மீண்டும் மீண்டும் தமிழ்த் தேசியக்கட்சிகளை ஏமாற்ற முயற்சிக்கின்ற வேளையில் நாம் சர்வதேசத்தின் ஆதரவைப் பெற்றால்தான் இந்த நீண்ட புரையோடிப் போயிருக்கின்ற அரசியல் தீர்வாக இருந்தாலும் அல்லது இனப் பிரச்சனைக்கான நீடித்து நிலைக்கக் கூடிய தீர்வாக இருந்தாலும் அதற்கு சர்வதேசத்தின் தலையீடு இல்லாமல் மஹிந்த கோட்டா கூட்டு குடும்ப அரசாங்கம் எந்தத் தீர்வையும் வழங்காது என்பது இப்போது எமக்குத் தெரிந்த விடயமாகவே உள்ளது. ஆகவே, நாம் ஒற்றுமைப்பட வேண்டும். இல்லாவிட்டால் எமக்கான தீர்வு எட்டாக்கனியாவே இருக்கும். அவ்வாறு ஒற்றுமையாகச் செயற்பட்டால்தான் எமது மக்களுக்கான தீர்வைப் பெற சர்வதேசத்தின் ஆதரவுடன் பயணிக்க முடியும். இல்லாவிட்டால் தொடர்ந்தும் நாம் ஒவ்வொரு விடயத்துக்கும் போராட வேண்டிய நிலைதான் ஏற்படும்.

தமிழ் அரசியல் கட்சிகளுக்குள் ஒற்றுமையில்லாமல் தொடர்ந்தும் பிளவுபட்டுக் கொண்டிருப்பதானது எமது தமிழ்க் கட்சிகளுக்குள் காணப்படும் மிகப்பெரிய சாபக்கேடு. தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒன்றாக - ஒற்றுமையாக - சாத்தியமான - ஜதார்த்தமான - தற்போது தமிழ் மக்களுக்கு என்ன தேவையோ அதனை முன்னிறுத்தி தற்காலிகமாகவேனும் ஒரு தீர்வை எட்டவேண்டும் என்பதற்காக 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த வேண்டும் எனக் கோரியும் எமது அரசியல் தீர்வு சமஷ்டி முறையிலாக இருக்க வேண்டும். அதுவே, எமது இலக்கு என்பதைச் கூட்டிக்காட்டியும் அனைவரும் கையெழுத்திட்டு இந்தியப் பிரதமருக்குக் கடிதம் அனுப்பும் அதே வேளை அதனைக் குழப்புவதற்காக ஏதோவொரு திரைமறைவு அரசியல் நிகழ்சிக்குப் பின்னால் நின்றுகொண்டு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் செயலாற்றுகின்றனர்.

அதற்கு இந்த ஒற்றுமைப்பட்ட கட்சிகளுக்குள்ளும் ஒரு பிரிவினர் ஆதரவு தெரிவித்து வருகின்றனர். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி 30 ஆம் திகதி இந்த ஒற்றுமைக்கு எதிராக செய்யும் போராட்டத்துக்கு தமிழரசுக்கட்சிக்குள் ஒரு சிலரும் பிரசாரம் செய்கின்றனர். அவர்கள் அங்கு ஒரு முகத்தையும் இங்கு ஒரு முகத்தையும் காட்டி வருகின்றனர். இதுவே தமிழ் மக்களின் ஒரு சாபம்.

எமது தமிழ்த் தேசியக்கட்சிகளின் ஒற்றுமையை ஆரம்பத்திலேயே உடைத்து அழித்து விட வேண்டும் என்பதற்காக எமக்குள் இருக்கின்ற சிலரும் வெளியில் உள்ள சிலரும் கடும் முயற்சி எடுத்து வருகின்றனர். எனினும் நாம் அர்ப்பணிப்புடன் இதில் செயற்படுவதால் அவர்களுடைய முயற்சிகளை உடைத்தெறிவோம்.

எமது மக்களின் விடுதலைக்காக நாம் ஒற்றுமைப்பட்டு செயற்படுவோம். அதற்கு ஊடகவியலாளர்களும் ஒத்துழைக்க வேண்டும். சிலரது அச்சுறுத்தலுக்கும் பயமுறுத்தலுக்கும் அஞ்சாது உண்மையை எழுதுபவர்களாக எமது மக்களுக்கு செய்திகளை வழங்குங்கள். இதுவே, இந்த தியாகம் செய்த ஊடகவியலாளர்களுக்கான அஞ்சலியாக இருக்கும் எனத் தெரிவித்தார். (100)

# கொடிகாமம் கரம்பை குறிஞ்சி அ.த.கவுக்கு தேசிய லொத்தர் சபையினால் நிதி உதவி



யாழ்.கொடிகாமம் கரம்பை குறிஞ்சி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை நூலக அபிவிருத்திக்காக தேசிய லொத்தர் சபையால் நிதி உதவி வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி பாடசாலையின் அதிபர் கண்ணதாசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் லொத்தர் சபையின் பணிப்பாளர் டிஜி.ஜெயசிறியால் ஒரு லட்சம் ரூபா வழங்கப்பட்டது.



பாடசாலைகளின் நூலக அபிவிருத்திக்காக தேசிய லொத்தர் சபையால் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு இவ்வாறு ஒரு லட்சம்ரூபா நிதி உதவி வழங்கப்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே யாழ்ப்பாணம் முல்லைதீவு மன்னார் ஆகிய 4 பாடசாலைகளுக்கு இவ்வாறு நிதி உதவி வழங்கி வைக்கப்பட்டதன் தொடராக இந்தப் பாடசாலைக்கும் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

# பட்டபக்கலில் கொள்ளை முயற்சி

மட்டக்களப்பு ஏறாவூர் 5 ஆம் குறிச்சி பகுதியில் செவ்வாய்க் கிழமையன்று மோட்டார் வண்டியின் இலக்கங்களை மறைத்து கும்பல் ஒன்று வாள், கத்தி, தடியுடன் நுளைந்து கொள்ளையர்கள் வீட்டில் இருந்த பெண்களை அச்சுறுத்தி நகைகளைக்கோரியுள்ளனர்.

குறித்த வீட்டிற்கு அயலவர்கள் வந்தவேளை கொள்ளை கும்பல் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

இச் சம்பவங்கள் அங்கிருக்கும் சி.சி.ரீ.வி கமராக்களில் பதிவாகியுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

## அங்கம் - 264

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**672.இப்படியான தலைமைகள் எல்லாம் தமிழ் மக்களுக்கு தீர்வோ ஒரு விடிவோ வருவதற்கு உதவுகிறார்கள் என்று நினைக்கிறீர்களா?**

வழியும் தெளிவாகத் தெரியாமல், அதனால் வரக்கூடிய பலனையும் விளங்கப்படுத்தாமல், கோஷத்திலும் உணர்ச்சியிலும்தான் அரசியல் கட்சிகள் முன்னேறுகிறார்கள். அரசியல் கோஷங்களைத் தவிர, இவர்கள் வேறு எதுவும் பேசுவதில்லை. சிந்தனை செய்வதுமில்லை. தேர்தல்தான் அவர்களது மூச்சு.

இந்த அரசில் கட்சிகளின் தலைமைகளைப் பற்றி எவ்வளவோ ஆய்வாளர்கள், அரசியல் கட்டுரையாளர்கள் பலவாக எழுதியுள்ளார்கள். ஆகவே அதற்கு மேலும் சாதத்தின் மேல் நல்லெண்ணெய் என்று நான் ஏதோ ஊற்ற வேண்டும் என்பதில்லை.

21 ஜனவரி 2022 இல் காலைக்கதிரில் 'அக்கரை/றை அலசல்' என்ற பத்தியில் என்.சத்தியமூர்த்தி குறிப்பிட்ட கருத்தின் சிறு பகுதியைக் கோடி காட்டுவது நல்லது என்று நினைக்கின்றேன்.

"இதற்குத் தற்போதைய சான்று, இந்தியப் பிரதமருக்கான – இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேயிடம் கையளித்த – கடிதத்தைக் குறித்து அனைத்துத் தலைவர்களும் கையெழுத்திட்ட பின்னர் எழுந்த பிரச்சினை. இது நான் பெரியவனா அல்லது நீ பெரியவனா? என்ற அளவிற்கு மீண்டும் கீழிறங்கி வந்தது. இதில் தனிநபர் அரசியலுக்கு அப்பால் சென்று வழக்கம்போல் தமிழரசுக் கட்சியே தலைமைப் பதவிக்கு தகுதி உடையது என்ற வகையில் பிரசாரம் மீண்டும் கையெடுக்கப்படுகிறது.

"இதற்குச் சாட்சி சொல்ல (மட்டுமே) இந்தியாவை அழைப்பது போலவே அண்மைக்கால நிகழ்வுகள் தோன்றின. இதற்கு மாற்றாக யோசிக்க வேண்டுமென்றால் இந்தியாவின் பதின்மூன்று சேர்ந்த கோரிக்கை மற்றும் அரசியலை உள்ளேயிருந்து உடைத்து எறிவதே தமிழரசின் தலையாய கடமையாக மாறிவிட்டதோ அல்லது மாற்றப்படுகிறதோ என்ற எண்ணமே மிஞ்சி நிற்கின்றது.

"ஆனால் இந்தத் தலைவர்களில் எவருக்குமே தமிழ் சமுதாயம் அடுத்தவேளை சோற்றிற்கு என்ன செய்யும்? இந்த கொரோனா பாதிப்பில் இருந்து எவ்வாறு மீளும்? என்பது குறித்து எல்லாம் கவலை யேயில்லை. அதற்கான திட்டங்கள் இல்லை. அது குறித்து ஓர் அறிக்கை விடவோ, அரசைச் சாடவோ அல்லது போராட்டம் நடத்தவோ அவர்கள் கையில் சரக்கு இல்லை. அது குறித்து சிந்தித்துச் செயலாற்றுவதற்கான அடிப்படை தகுதியும் இல்லை. அதனை வளர்த்துக் கொண்டால் மட்டுமே நிதி உள்ளிட்ட வட மாகாண அமைச்சகங்களில் கூட சிறப்பாக செயலாற்ற முடியும். அதனால் தமிழ் மக்கள் பயனுற முடியும் என்ற எண்ணமும் இல்லை.

"பாவம் தமிழ் மக்கள்!" – என முடித்திருந்தார்.

இந்தியாவை விலக்குவதற்கானதோ அல்லது பதின்மூன்று சேர்ந்த அரசியல் கோரிக்கைகளை உள்ளிருந்து உடைத்து எறிவதற்கோ அல்லது கஜேந்திரகுமார் தரப்பு வெளியிலிருந்து எதிர்த்துப் போராடுவதோ எதுவானாலும் அதற்குள் கோட்டபாய அரசு பிரேமதாசா விடுதலைப் புலிகளுக்கு ஆயுதமும் பாதுகாப்பும் தந்த மாதிரி, உள்ளே புகுந்து ஊக்குவிக்கும்.

கஜேந்திரகுமாருக்கு புலம்பெயரில் ஆதரவு தர முற்படும் பகுதிகள் ஆதங்கம் தருவதாகவும் கே.பியை இணைத்தும் பேசப்படுகின்றன.

பாவம் தமிழ் மக்கள் என்று திரும்பவும் சொல்ல வேண்டியிருக்கிறது.

**673.இலங்கை - இந்திய ஒப்பந்தம், 13 ஆம் சட்ட திருத்தம் என்பவற்றால் தமிழ் மக்களுக்கு ஏதும் நன்மைகள் உண்டா?**

நன்மைகள் உண்டா, அது தீமையானதா என்பது ஒருவரது பார்வையிலும் அவரது மனோபாவத்திலும் தங்கியுள்ளது. பின்வரும் உதாரணம் வழமையமாகச் சொல்லப்பட்டு பலர் அறிந்ததுதான்.

அரைவாசி தண்ணி மட்டுமே நிரப்பப்பட்ட கிளாஸை கையிலெடுக்கும் ஒருவன் இது அரை கிளாஸ்தான். முழுதல்ல என்று நிலைத்து முழுதாக நிரப்பப்பட்ட கிளாஸை தேடலாம். அல்லது இன்னொருவன் இதில் அரைவாசி உள்ளது. இதை மேலும் நிரப்பிக் கொள்ளலாம் என சிந்திக்கலாம்.

இன்னொரு உதாரணத்தில் கல்யாண தம்பதிக்கு கொடுக்கப்படும் சீதனம் வாழ்வுக்குப் பத்தாது என்று அடம்பிடித்து திருமண வாழ்க்கையை அதைக் கேட்டு கேட்டு நரகப்படுத்தி இழந்து விடும் ஒருவர். இன்னொரு புறத்தில் அதை வைத்துக் கொண்டே தான் ஏதோ மேலும் போட்டுத் தேடிக் கொள்ளலாம் என நினைக்கும் இன்னொருவர். இப்படி வாழ்க்கையின் அடிப்படை நியதிகள்தான் அரசியலை மட்டுமல்ல, விடுதலைச் சிந்தனைகளைக் கூட வளர்க்கின்றன. அங்கே எடுக்கும் தப்புத்தாளங்கள் பெறுபேறுகளை தீர்மானித்து விடும்.



கஜேந்திரகுமார்

இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட காலத்திலிருந்தே ஊடகவாதிகளும் அரசியல் ஆய்வாளர்களும் இப்படியான நன்மை தீமைகள் பற்றிப் பலவாக எழுதினார்கள். பக்கம் சாராமல், பக்கம் சார்ந்து அரசாங்கங்களுக்காக என்று பலவகை. இதைக் குறித்து 23 ஜனவரி 2002, ஈழநாடு பத்திரிகைன் 'இப்படியும் நடக்கிறது' என்ற பகுதியில் வந்த கருத்தை மீளப் பார்ப்பது நன்று. புரிந்துணர்வுக்கும் உதவும்.

"பதின்மூன்றாம் திருத்தத்தில் ஈழத் தமிழருக்கு

1. சுயநிர்ணய உரிமை இருக்கின்றதா?
இல்லை.

2.இறைமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதா?
இல்லை.

3.தாயகக் கோட்பாடு அங்கீகரிக் கப்பட்டுள்ளதா?
இல்லை

4.தமிழர்கள் ஒரு தேசிய இனமாக ஏற்கப்பட்டிருக்கிறார்களா?
இல்லை

5.காணி அதிகாரம் உள்ளதா?
இல்லை

6.பொலிஸ் அதிகாரம் உள்ளதா?
இல்லை

7.தன்னாட்சி அதிகாரம் உள்ளதா?
இல்லை

8.பாதுகாப்பு அதிகாரங்கள் உள்ளனவா?
இல்லை

9.நிதிசார் சுயாதீன அதிகாரங்கள் உள்ளனவா?
இல்லை

10.வட - கிழக்கு இணைப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதா?
இல்லை.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடக பேச்சாளரிடம் இருந்து ஊடகங்களுக்கு அனுப்பப்பட்ட குறிப்பு ஒன்றில் கேட்கப்பட்ட கேள்விகளும் அவற்றுக்கு அவர்களே வழங்கிய பதில்களுமே மேலே தரப்பட்டுள்ளன..........

"......... ....... ஆனால் அதனை அன்று நிராகரித்தவர்களில் முக்கியமானவர்கள் விடுதலைப் புலிகள். அதனை நிராகரித்து விட்டு அவர்கள் அப்போது உலகின் மிகப் பெரிய இராணுவம் ஒன்றுடனேயே மோதலுக்குத் தயாரானார்கள். அப்போது 'உலகின் மிகப் பெரிய இராணுவம் ஒன்றுடன் மோத முடியுமா என்றெல்லாம் நாங்கள் நினைக்கவில்லை. இந்தியா எம்மீது ஒரு தீர்வைத் திணிக்க நினைக்கிறது. அதனை முற்றாக எதிர்க்க வேண்டும் என்ற எண்ணமே பலருக்கு இருந்தது.

இலங்கை – இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் ஈ.பி.ஆர்.எல்.எவ். அதனை ஏற்றுக்கொண்டு இணைந்த வடக்கு கிழக்கு மாகாணசபையை ஏற்படுத்தி ஆட்சி செய்ததுபோல புலிகள் அதனை ஏற்றுக் கொண்டிருந்தால் நிலைமை வேறுவிதமாக மாறியிருக்கும் என்று வாதிடுபவர்களும் நம் மத்தியில் உண்டு. அது வேறு விவாதத்திற்குரியது.

ஆகவே இவை அரை கிளாஸ் தண்ணீர், சீதனம் போன்று பார்வையிலும் அணுகு முறையிலும் அமைந்தவை.

(வளரும்)



காலைக்கதிர் Kalaikkathir

# 13 ஐ ஆதரிக்கும் டக்ளஸுடன் சேர்ந்து நீங்கள் பயணியுங்கள்!

## வினோ எம்.பிக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னனி சாட்டை

13 ஆவது திருத்தச் சட்டம் தமிழர்களது அபிலாகைளைப் பூர்த்தி செய்யாது என்ற காரணத்துக்காகவே 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாவீரர்களை இழந்துள்ளோம் எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னனியின் வவுனியா மாவட்ட செயலாளர் எஸ்.தவபாலன் தெரிவித்துள்ளார்.

வவுனியா ஊடக அமையத்தில் இடம் பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியவை வருமாறு–

வவுனியா வடக்கு பிரதேச சபை கடந்த ஒரு மாதத்துக்கு முன்பு பேரினவாதிகளின் கைகளுக்கு சென்றுள்ளது. இந்த ஆட்சி மாற்றம் தொடர்பில் சமூக ஊடகங்களில் விசமத்தனமான பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

வவுனியா வடக்கு பிரதேச சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி அமைத்து இருந்ததுடன், அதன் பின்னர் புதிய தவிசாளர் தெரிவின் பின் சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியைக் கைப்பற்றி இருந்தது. புதிய தவிசாளர் தெரிவின் போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு முழுமையான ஆதரவை வழங்கியிருந்தது. எமது கட்சியின் மூன்று உறுப்பினர்களும் தவிசாளர் தெரிவின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு சார்பாக வாக்களித்து இருந்தார்கள்.

எமது வாக்களிப்பின் ஊடாகத் தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நியமித்த தவிசாளருக்கும் சம அளவில் வாக்குக் கிடைத்தது. திருவுளச் சீட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நியமித்த தவிசாளர் தோல்வியுற்றிருந்தார். ஆனால், தற்போது தமிழ் தரப்புக்கள் எனக் கூறி 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு இந்தியாவிடம் கோரியுள்ளது. நாங்கள் இன்று ஆயிரக் கணக்கான மாவீரர்களை மண்ணுக்காக இழந்துள்ளோம். 13 ஆவது திருத்தச் சட்டம் வேண்டாம் என்று தான் இவ்வளவு தியாகங்களையும் செய்தோம். தமிழ் மக்களுடைய அபிலாகைளைத் தீர்த்து வைக்கக் கூடிய ஒரு தீர்வாக 13 ஆவது திருத்தச் சட்டம் இல்ல எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னனி மக்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துகின்ற போது இதை விரும்பாதவர்கள் நாம் தமிழ் மக்களிடம் உண்மையை கொண்டு சென்று சேர்த்து விடுவோம் என்பதற்காக வவுனியா வடக்கு பிரதேச சபை தொடர்பான கட்டுக்கதைகளை சமூக வலைத் தளங்களிலும், ஊடகங்களிலும் பரப்பி வருகிறார்கள்.

வவுனியா வடக்கு பிரதேச சபையின் ஆட்சி மாற்றத்துக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னனி தான் காரணம் என பரப்பப்பட்டு வரும் கட்டுக்கதைகளை நாம் முற்றாக நிராகின்றோம். கடந்த 10 வருடங்களுக்கு மேலாக தமிழ் தேசிய அரசியல் பரப்பில் ஒரு கொள்கை மாறாத அரசியல் இயக்கமாக நாம் வளர்ந்திருக்கின்றோம். அந்தவகையில் வவுனியா வடக்கு பிரதேச சபையின் ஆட்சி பெரும்பான்மையினத்தவரிடம் செல்லக் கூடாது என்பதற்காக எமது மூன்று உறுப்பினர்களும் கூட்டமைப்புக்கு வாக்களித்து இருந்தார்கள். தமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் தமக்கு ஆதரவு வழக்குமாறு எமது உறுப்பினர்களிடம் கேட்டும் இருந்தார்கள். இதன்போது தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் கொள்கை சார் முரண்பாடுகள் இருக்கின்ற போதும் நாம் பெரும்பான்மையினத்தவர் வரக்கூடாது என்பதற்காக ஆதரவு வழங்குவோம் எனத் தெரிவித்து அதன்படி செயற்பட்டு இருந்தோம்.

எனவே, தவிசாளர் தெரிவு நடைபெற்று ஒரு மாதம் கடந்து விட்டது. ஆனால் இப்போது 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் தமிழ் மக்களுக்கு அதில் அரசியல் தீர்வு இல்லை எனச் சொல்லப் போகின்றோம் என்பதற்காக திட்டமிட்டு சேறு பூசுகிறார்கள். இவ்வாறான நிகழ்ச்சி நிரல்களின் மூலம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை அழிக்க முயல்கிறார்கள். 10 வருடத்துக்கு மேலாக நாம் முன் கொண்டு வந்த நேர்மையான அரசியலை நாம் தொடர்ந்தும் முன்னெடுப்போம். மாவீரர்களின் ஆணையாக இதனை நாம் முன்னோக்கி கொண்டு செல்வோம்.

13 ஆவது திருத்தச் சட்டம் என்பது என்றைக்கோ அடிக்கப்பட்ட ஒரு சாவு மணி. 1987 ஆம் ஆண்டு; பல இயக்கங்கள் உருவாக்கப்பட்டு 13 ஆவது திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்ட போது அது உப்புச் சப்பில்லாதது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தற்போதைய தலைவர் சம்பந்தன் நிராகரித்து இருந்தார். அன்று தொட்டுக் கூட பார்க்க மாட்டேம் என்றவர்கள் இன்று 13 ஆவது திருத்தச் சட்டத்தை கையில் எடுத்திருப்பதற்கான தேவைப்பாடு என்ன...? முற்று முழுதாக இந்தியாவின் நிகழ்ச்சி நிரலின் கீழ் இந்தியாவின் எஜமான் விசுவாசத்துக்காக இதைச் செய்கிறார்கள். எனவே, இது ஒரு துயர் தோய்ந்த வரலாறு.



அதைனையும் தாண்டி பல இயக்கங்களில் இருந்தவர்கள் தான் இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ளார்கள். ஊடகவியலாளர்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற நாட்டுப்பற்றாளர் சுகிர்தராஜன் அவர்களின் 16 ஆவது ஆண்டு நினைவு தின நிகழ்வில் நினைவு பேருரை ஆற்ற வந்த ரெலோவின் நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் அந்த நிகழ்வின் புனிதத்தன்மையை மறந்து முற்று முழுதாக அரசியல் கோமாளித்தனமானக் கருத்தை அங்கு பதிவு செய்திருந்தார். இது மிகவும் வேதனையான விடயம்.

அவர்கள் கூட ஆயுதம் சார்ந்த இயக்கமாக இருந்தார்கள். அவர்கள் சார்பிலும் பலர் மண்ணுக்கு விதையாகியுள்ளார்கள். அன்று தமிழ் மக்களது அபிலாகைளை 13 ஆவது திருத்தச் சட்டம் பூர்த்தி செய்யாது என்று கூறிவிட்டு, இன்று எந்த வகையில் 13 ஆவது திருத்தச் சட்டம் தமிழ் மக்களது அரசியல் அபிலாகைளைப் பூர்த்தி செய்யும் எனக் கருதி பேசியுள்ளார். முன்னனி குழப்பவில்லை. 13 ஆவது திருத்தச் சட்டத்தை முற்று முழுதாக எதிர்க்கின்றது.

நாங்கள் 50 ஆயிரத்துக்கு மேற்பட்ட மாவீரர்களை 13 ஆவது திருத்தச் சட்டம் தமிழர்களது அபிலாகைளைப் பூர்த்தி செய்யாது என்ற ஒன்றுக்காகத் தான் இழந்தோம். ரெலோ என்ற இயக்கம் தான் அரசியல் கட்சியாகவும் செயற்படுகின்றது. வினோ நோகராதலிங்கத்தின் பல சகாக்கள் கூட 13 ஆவது திருத்தச் சட்டத்தில் தீர்வு இல்லை எனப் போராடியதால் தான் மண்ணுக்குள் புதைந்துள்ளார்கள். அப்படியானவர்களை மண்மான உயிர்த் தியாகம் செய்த ஊடகவியலாளர் முன்னால் நின்று 13 ஆவது திருத்தம் காலத்தின் தேவை என்று சொல்கிறார். நாட்டுப்பற்றாளர் நடேசன், நாட்டுபற்றாளர் சுகிர்தராஜன், மாமனிதர் தராக்கி சிவராம் போன்றவர்கள் இருந்திருந்தால் 13 ஆவது திருத்தச் சட்டத்தைத் தொட்டுப் பார்த்திருப்பர்களா அல்லது 13 ஆவது திருத்தச் சட்டம் தேவை என்று சொல்லியிருப்பர்களா?. அவர்களுடைய நிகழ்வில் கூட மனச்சாட்சியைத் தொட்டுப் பேச முடியாது இந்தியாவின் நிகழ்ச்சி நிரலில் நின்று கொண்டு முன்னனியை விமர்சனம் செய்கிறார்.

டக்ளஸ் தேவானந்த அன்று முதல் ஒற்றையாட்சிக்குள் 13 ஆவது திருத்தச் சட்டம் தான் தீர்வு என்று சொல்கிறார். அப்படி என்றால் அவருடன் சேர்ந்து வேலையைப் பாருங்கள். ஒன்றுபட்டு அழியப்போகிறோமா அல்லது தனித்திருந்து இனத்தைக் காப்பாற்றப் போகிறோமா என்பது தான் இப்போதுள்ள கேள்வி. தமிழ் மக்களின் அரசியல் சார்ந்த விடயங்களில் விட்டுக்கொடுக்காத கொள்கையின் பால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னனியாகிய நாம் சென்று கொண்டிருக்கின்றோம்.

எதிர்வரும் 30 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் பாரியளவிலான ஆர்ப்பாட்டம் ஒன்றைச் செய்யவுள்ளோம். காலை 9.30 மணிக்கு நடைபெறும் போராட்டத்தில் தமிழ் தேசியத்தை நேசிக்கும் உறவுகள் ஒன்றுபட்டு 13 ஆவது திருத்தத்துக்கு எதிராக எமது எதிர்ப்பை வலுப்படுத்துவோம் எனக் கேட்டுக் கொள்கின்றேன். தமிழ் தேசிய மக்கள் முன்னனி சேறுபூசல்களை கடந்து மக்கள் ஆதரவுடன் வீறு நடை போடும் எனத் தெரிவித்தார். (100)

# மோதகம் வேண்டாம்; கொழுக்கட்டை வேண்டுமாம் 13 ஐ வேண்டாமாம்; மாகாண சபை வேண்டுமாம்!

## முன்னணி இரட்டை வேடம் என சுரேஷ் குற்றச்சாட்டு

13 ஆவது திருத்தம் தமிழ் மக்களுக்கு ஏற்புடையது அல்ல எனக் கூறும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி, வடக்கு மாகாணசபையின் முதலமைச்சர் வேட்பாளருக்கு சுகாஷ் மற்றும் காண்டீபன் ஆகியோருக் கிடையில் பிடுங்கல் பாடு நிலவுகின்றது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

நேற்று (செவ்வாய்க்கிழமை) யாழ். ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

13 ஆவது திருத்தச் சட்டம் தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்ற அரசியல் தீர்வுக்கு கிடையாது அதில் நாம் வெளிப்படையாகவே இருக்கிறோம். ஒன்றிணைந்த தமிழ்த் தேசியக் கட்சிகளால் இந்தியாவுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறு கோரி இருக்கிறோம். 13 ஐ நாம் இந்தியாவிடம் கேட்பதற்குக் காரணங்கள் இருக்கின்றன. தற்போது இருக்கின்ற சூழ்நிலையில் எமக்கு இருக்கின்ற குறைந்தபட்ச அதிகாரமாக 13 ஆவது திருத்தமே காணப்படுகிறது.

இதை இந்தியாவுக்கு நாம் வலியுறுத்தியுள்ளோம். இந்தியா, இலங்கை அரசை எவ்வாறு கையாளப் போகின்றது என்பதை 13 ஆவது திருத்தம் நடைமுறைக்கு வரும் போதே அறிந்து கொள்ளலாம்.

சிலர் 13 ஆவது திருத்தம் தமிழ் மக்களுக்கு தேவை அல்ல என போராட்டம் நடத்துவதற்குத் தயாராகிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களிடம் நான் ஒன்றைக் கேட்கிறேன் 13 ஆவது திருத்தச் சட்டம் வேண்டாம் எனக் கூறுகின்றவர்கள் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடப் போவது எதற்கு?

அதுமட்டுமல்லாது அவர்களின் கட்சிக்குள் முதலமைச்சர் வேட்பாளர் யார் என்ற போட்டி மேலோங்கி இருக்கின்ற நிலையில் இவர்களின் நோக்கம் என்ன?

வடக்கு மாகாண சபையைக் கைப்பற்றி 13 ஆவது திருத்தத்தை இல்லாமல் செய்யப் போகிறார்களா அல்லது மாகாணசபையால் வழங்கப்படுகின்ற சுகபோகங்களை அனுபவிக்கப் போகிறார்களா? என்பதைப் பகிரங்கமாகக் கூற வேண்டும். முன்னணியினர் 13 ஆம் திருத்தம் தேவையில்லை. அதை அமுல்படுத்துமாறு கூறுபவர்களை எதிர்க்க வேண்டும் என வீதிகளில் கூறுவதை விடுத்து, சமஷ்டியை எவ்வாறு ஏற்படுத்தப் போகிறோம் என்பதை மக்களுக்குக் கூற வேண்டும்.

சீனா ஆதிக்கம் வடக்கின்மேல் ஆகியுள்ள நிலையில் 13 ஆவது திருத்தத்தை அமுல் படுத்துவதுவதை உறுதி செய்ய வேண்டிய தேவை இந்தியாவுக்கே அதிகம் உள்ளது. தமிழ் மக்களின் காணிகளை அரசாங்கம் பறித்து வருகின்ற நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்தும் அவற்றையும் சாதிக்க முடியவில்லை.



13 இன் மூலம் மாகாண சபைக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைச் செயற்படுத்துவதற்கு மாகாண சபை ஒன்று நடைமுறையில் இருக்கும் போதே ஓரளவேனும் கட்டுப்படுத்தலாம். ஆகவே, 13 வேண்டாம் என மக்களைக் குழப்புவதை விடுத்து சமஷ்டியை எவ்வாறு பெறலாம் என்பதைக் கூறுங்கள். நாமும் இணைந்து பயணிக்கர் தயாராக இருக்கிறோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# திருக்கோணமலை விஸ்வநாத சிவன் கோவில்

## குடமுழுக்கு சிறப்பம்சம் 27-01-2022



## விசாலாட்சி சமேத விஸ்வநாத சிவனின் மகத்துவம்

திருக்கோணமலை வாழ் மக்களுக்கு விசாலாட்சி சமேத விஸ்வநாத சிவன் கோவில் புனிதமானது. ஒரு சனீஸ்வரன் கோவில் அமைவதற்கு, நூறு சிவன் கோவில்களும், ஆயிரம் விஷ்ணு ஆலயங்களும் அமைந்து இருக்கவேண்டும் என்பது ஆன்றோர் வாக்கு.

திருக்கோணமலையில் சனீஸ்வரனுக்கு ஒரு தனிக்கோவில் அமைந்திருப்பதும், புரட்டாதி சனிக்கிழமைகளில் மூலவரான சனீஸ்வரனுக்கு அபிகே ஆராதனைகளும், உற்சவமூர்த்தி காக வாகனத்தில் வீதிவலம் வருவதும், எள்ளுப் பொட்டல ஜுவாலை வீசும் ஒளியில் ஜொலித்து நிற்கும் மூர்த்தியின் அழகும், இன்றும் நாம் மகிழ்ந்து அனுபவிக்கக்கூடிய அற்புத காட்சியாகும்.

இற்றைக்கு சில நூற்றாண்டுகட்கு முன்னர், இலங்கையை முடிக்குரிய குடியேற்ற நாடாக 1802 ஆம் ஆண்டு பிரகடனப்படுத்தியபின் டச்சுக்காரர்களால் இடிக்கப்பட்டு அழிக்கப்பட்ட திருக்கோணமலை ஆலயங்கள் மீண்டும் மீளமைப்புச்செய்து கட்டி எழுப்பப்பட்டு புனருத்தாரணம் செய்யப்பட்டன.





கதிர்காம முதலியார் என்பவர் விஸ்வநாத சிவன் கோவிலைக் கட்டி எழுப்பி ஜீரணோர்த்தன புனருத்தாரண மகா கும்பாபிஷேகம் செய்து முடிக்க ஆசைப்பட்டார். இவர் திருக்கோணமலையில் தற்போது கடல்முக வீதி என்று அழைக்கப்படும் வீதியில் வாழ்ந்துவந்தார். இவரை 'கங்கைகண்ட கதிர்காமர்' என்றும் அழைப்பதுண்டு. தற்போது விஸ்வநாத சிவன் கோவில் அமைந்து இருக்கும் செங்கப்பண்ணை குளத்தருகே சிவபெருமானுக்கு ஆலயம் அமைத்தார்.

இதற்கு ஒருசில நூறுஆண்டுகளுக்கு முன்னர் காசியிலிருந்து திருக்கோணேஸ்வர தரிசனத்திற்கு சிவ ஞானமுனிவர் என்ற ஒரு சந்நியாசியார் யாத்திரை வந்திருந்தார். தமது ஆத்மார்த்த பூஜை லிங்கத்தை இந்த திவ்விய ஸ்தலத்தில் ஸ்தாபிக்கும்படி அவருக்கு கட்டளையாகியது. 'காசிவிஸ்வநாத சிவன்' திருக் கோணமலையில் குடி கொண்டார்..

காலப்போக்கில் பொதுக்கூட்டம் கூடி த.வேலுப்பிள்ளை அவர்களையும் அவருக்கு வயதான காரணத்தால் அவர் மகன் அகிலேசபிள்ளை அவர்களையும் சைவப்பெருமக்களின் அனுசரணையுடன் முகாமையாளர்களாக்கினர். 1895 மார்ச் மாதம் இவர்கள் பழுது அடைந்து இருந்த கோவிலை திருத்தி 1896 ஆனி மாதம் புனருத்தாரண கும்பாபிஷேகம் செய்து கோவிலைப் பரிபாலித்து வந்தனர். இவ்வாண்டே 'சிவகாமி அம்பிகா தேவி ஸமேத ஆனந்த நடராஜருக்கு' கோவில் அமைக்கப்பட்டது. கோவில் தீர்த்தக் கிணற்றினிலேயே இன்றுவரை சுவாமி தீர்த்தம் ஆடி வருகின்றார்.

விஸ்வ நாத சிவன் கோவில் முன்றிலில் மணமும் நிழலும் தந்த இரு மகிழமரங்களை சிவன் கோவில் வட்டாரத்தில் வாழ்ந்தவர்கள் ஒருபோதும் மறக்கவேமாட்டார்கள். 1918 ஆம் வருடம் பூந்தோட்டம் ஒன்று அமைந்தது. சிவன்கோவிலின் வடக்கு வீதியில் இருக்கும் வைரவர் கோவிலிலும் வழிபாடு நடைபெற்றது.


1942 சித்திரை மாதம் நிகழ்ந்த ஜப்பான் குண்டு வீச்சிற்கு முன் திருவாதிரை திருவிழாவின்போது நான் அனுபவித்த அற்புதக் காட்சியுடன் இந்த வரைவை பூரணப்படுத்த ஆசைப்படுகின்றேன். திருவாதிரை பத்து நாள்களிலும் பத்து வித சாத்துப்படியில் எம்பெருமான் காட்சியளிப்பர். எட்டாந் திருவிழா புட்டுக்கு மண் சுமப்பது. புட்டு வாணிச்சி அம்மையார் புட்டு அவித்த வண்ணம் அடுப்பின் மேல் முட்டியில் புட்டுக் குழலுடன் அமர்ந்தபடி இருக்க சிவபெருமான் மண்வெட்டியைத் தோளில் சுமந்தபடி கூடையை தலையில் வைத்து காணப்படும் சாத்துப்படி சிறு வயது முதல் பலவருடங்கள் பார்த்துப் பார்த்து ரசித்துவந்த அற்புதக்காட்சி.



பல்லாண்டின் பின்னர் கோயில் குடமுழுக்கு இன்று சிவனருளால் கைகூடியமை திருகோணமலை மக்களுக்கு ஒருவரப்பிரசாதம். திருகோணமலை மக்கள் சிவனருள் துய்த்து, வாழ்க்கையில் சீரும்சிறப்பும் பெற்று உய்ய, விசாலாட்சி சமேதவிஸ்வநாதசிவனை இறைஞ்சிவேண்டுகிறேன்!

**- அருளாளர் சந்திரசேகரம்பிள்ளை ஜெயச்சந்திரன் -**

## புராதன திருத்தலம்



ஈழத்திருமணி நாட்டின் கதிரவனின் உதய ஒளி படரும் குணதிசைபால் அமைந்திருக்கும் 'தெட்சணகைலாயம்' எனப் புகழ் பெற்ற திருக்கோணமலை நகரின்கண் அமைந்து அருளாட்சி புரிந்துவரும் ஸ்ரீ விசாலாட்சி அம்பாள் சமேத விஸ்வநாத சுவாமி கோயில் மிகத் தொன்மையான வரலாற்றை கொண்டுள்ளதாகும். இற்றைக்கு 350 வருட காலங்களிற்கு முற்பட்ட புராதன திருத்தலமாகும்.

இத்தலத்தின் மஹாகும்பாபிஷேகப் பெருவிழா இன்று 27.01.2022 வியாழக்கிழமை அன்று நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது. 1999இன் பின் - நீண்ட காலத்திற்குபின் - இது நடைபெறுகின்றது.

கும்பாபிஷேக விழா யாதொரு விக்கினமுமின்றிச் சிறப்புற நிகழ்ந்தேறவும், பங்குபெறும் பக்தகோடிகளும், திருப்பணி அடியவர்களும் எல்லாச் சீரும் சிறப்பும் பெற்றுய்யவும், எமது நாடும், நாட்டுமக்களும் பற்றிய பழவினைகளும், தொற்றிய கொடு நோய்களும் நீங்கப் பெற்று நலம் பல பெற்றுத்திகழவும் எல்லாம் வல்ல எம் பெருமானையும் பெருமாட்டியையும் இறைஞ்சி வேண்டி வாழ்த்துகின்றேன்.

**- சிவாகமசேகரர் சிவஸ்ரீ சோ.சசிதரக்குருக்கள் -**
**(பிரதமகுரு ஸ்ரீ விசாலாட்சி அம்பாள் சமேத விஸ்வநாதசுவாமி கோயில்)**

## 73 அடி உயரமான இராஜகோபுரம்



ஈழமணித் திருநாட்டில் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் அவர்களினால் தேவாரப் பாடல் பெற்ற மாதுமை அம்பாள் சமேத திருக்கோணேஸ்வரர் ஆலயம் அமைந்துள்ள திருக்கோணமலை வரலாற்றுச் சிறப்பு மிக்க புண்ணிய பூமியாகும்.

இம்மண்ணின் மத்தியில் கோவில் கொண்டு எழுந்தருளி அருள் பாளித்துக் கொண்டிருக்கும் அருள்மிகு விசாலாட்சி அம்பாள் சமேத விஸ்வநாதப் பெருமான் சிவன் ஆலயம் 350 ஆண்டுகளுக்கு மேலான வரலாற்றுச் சிறப்பையும் பாரம்பரியத்தையும் கொண்டது.

இந்த ஆலயத்தின் மூன்றாவது கும்பாபிஷேகம் 22 வருடங்கள் கடந்து 27-01-2022 வியாழக்கிழமை காலை புனருத்தாபன மகா கும்பாபிஷேகமாக நடைபெறுகின்றது. ஏழு (07) தளங்களோடு கூடிய 73 அடி உயரமான இராஜகோபுரம் அமைக்கப்பட்டு, பல வகையான திருப்பணி வேலைகளும் செய்யப்பட்டு, பஞ்சவர்ண வர்ணங்களும் பூசப்பட்டு இவ்வாலயம் அருட்பொலிவுடன் திகழ்கின்றது.

உலகையே அச்சுறுத்திக் கொண்டிருக்கும் கொரோனா வைரஸ் தொழுநோயிலிருந்து உலக மக்கள் அனைவரையும் காத்தருளி, அனைத்து மக்களும் நலமாகவும் - சுகமாகவும் - சந்தோமாகவும் வாழ எம்பெருமான் அருள்புரிய வேண்டும் என்று குடமுழுக்குக் காணும் விசாலாட்சி அம்பாள் சமேத விஸ்வநாதப் பெருமான் திருவடிகளை கைகூப்பித் தொழுது இறைஞ்சுகின்றேன்!.

**- நல்லையா சிறிஸ்கந்தராசா -**
**(செயலாளர், திருக்கோணமலை மாவட்ட இந்து சமய அபிவிருத்தி சபை).**

# திருக்கோணமலை விஸ்வநாத சிவன் கோவில்

## குடமுழுக்கு சிறப்பம்சம் 27-01-2022



## விசாலாட்சி சமேத விஸ்வநாத சிவனின் மகத்துவம்

## பழம் பெரும் தேவஸ்தானம்



திருவருளோங்கும் திருமலை நகரில், திருஞானசம்பந்தர் வீதியில் கோயில் கொண்டு பன்னெடுங்காலமாக அருளாட்சி புரியும் ஸ்ரீ விசாலாட்ச்சி சமேத ஸ்ரீ விஸ்வநாத சுவாமி (சிவன்) ஆலயம் பழம் பெரும் தேவஸ்தானம் ஆகும். இவ்வாலயத்தில் பல வருடங்களுக்கு பின்பு சிவனடியார்களின் அயராத முயற்சியினால் புதிய ராஜகோபுரம் அமைக்க பெற்றும், பல திருப்பணி வேலைகள் செய்யப் பெற்றும், அழகிய ஓவியங்களால் கண்களை இறைவன் பால் ஈர்க்கச் செய்யும் ஒளியும் அழகும் மிக்க முழுமை பெற்ற ஆலயமாக இங்கு காட்சி அளிக்கிறது.

**- லக்குமிதேவி சிறிதரன் -**
**(இந்து கலாசார உத்தியோகத்தர் திருகோணமலை)**

# உள்ளமே ஈசன் உவக்கும் மலர்

இன்றைய நாலாயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட சிவவழிபாடு பெருமையுடையது திருகோணமலை மண். இப்பூமி சிவ பூமியென சைவ மெய்யடியார்கள் ஒருமனதாக ஏற்றுக்கொண்டுள்ளனர். திருகோணமலை மண்ணில் சிவலிங்கங்கள் நிறைந்து காணப்பட்டிருக்க வேண்டும். அடிக்கொருலிங்கம் உண்டென இன்றும் பேசப்படுகிறது. ஆதலால் சிவலிங்கம் நிறைந்த பூமியெனக் கொள்வோமாயின் சிவவழிபாடு மேன்மையுற்று இருந்துள்ளது என்பதற்கு அதுவே சான்றாகும்.

அன்பேசிவம் என்பர் மேலோர். குடிதனை நெருக்கிப் பெருக்கமாய்த் திருகோணமலையில் மக்கள் வாழ்ந்தார்கள் என்கிறார் திருஞானசம்பந்தப் பெருமான். நெருக்கமாக வாழ்ந்தார்கள் என்றால் அன்புடன், ஒற்றுமை காத்து வாழ்ந்தார்கள் எனப்பொருள் காணமுடியும்.

குரைகடல்ஓது மலைமீது வீற்றிருந்து கருணைகாட்டும் எம்பெருமான் துணைகொண்டு,317 வருடங்களுக்கு மேலாக அருள்மிகு விஸ்வநாத சுவாமி (சிவன்) கோயில் வரலாற்றை மிகவும் சுருக்கமாக எனது அறிவுக்கு எட்டியவரை எழுதுகிறேன். தவறுகள் ஏற்படுமாயின் எதிர்காலத்தில் திருத்தங்களுடன் இவ்வரலாற்றை சமூகம் எழுதித் தொடரவேண்டும் என்பது எனது பணிவான வேண்டுகோளாகும்.

காசியில் அருள்புரியும் காசிவிஸ்வநாதசுவாமி (சிவன்) கோயிலில் காட்சி தருகின்றார். காசியில் உள்ள சிவனுக்கு விஸ்வநாதசுவாமி (சிவன்) கோயிலில் ஆதிலிங்கமாகும். சோமலிங்க முதலியார் என்னும் நல்லார் வாணிப தெருவில் (இன்று மத்திய வீதி) கொட்டில்கட்டி அதனுள் சிவலிங்கத்தை பிரதிஷ்டை செய்து வழிபட்டார் அதனை மக்களும் வழிபட்டு பயன் கொண்டனர்.

அதன் பெருமைகண்ட கதிர்காமமுதலியார் என்னும் சைவநெறிப் பெருமகன் மக்களின் ஆதரவுடன் முன்னின்று வாணிபதெருவில் வழிபட்ட லிங்கத்தை செங்கற்பண்ணை என்ற இடத்தில் கேணியுடன் கோயிலாக அமைக்கஅருள் கூடியது. செங்கற்பண்ணை இன்று சிவபுரி என்று அழைக்கப்படுகிறது. இப்பிரதேசம் சிவன் கோயிலுக்குரிய சொந்தநிலமாகும். 1999 ஆம் ஆண்டுக்குப்பின் நகரசபையினர் அனைத்து வீதிகளுக்கும் பெயர் சூட்டிய காலத்தில் சிவன் கோயில் அமைந்த பகுதியெனக் கொண்டு சிவபுரிஎனப் பிரகடனப்படுத்தினர். சிவன் கோயிலுக்கு முன்செல்லும் வீதி திருஞானசம்பந்தர் வீதியெனப் பெயரிட்டனர். திருகோணமலைப் பதிகம் பாடிய சமயகுரவர்களில் ஒருவரான திருஞானசம்மந்தப் பெருமானை ஞாபகமூட்ட அப்பெயர் சூட்டப்பட்டது.

திருகோணமலைதிருவிஸ்வநாதசுவாமி(சிவன்) கோயில் குடமுழுக்கு 1898 ஆம் ஆண்டு ஆனிமாத நன்னாளில் நடைபெற்றதாக அறிகிறோம். திரு. த. வன்னிமையும், வே. அகிலேசபிள்ளைஅவர்களதும் தலைமையில் நடைபெற்ற இம்முயற்சி 1898 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் அ. இராசகோன், வைரவப்பெருமான் என்பவர்கள் சைவமக்களின் நிதியுதவி, சதுரஉதவி பெற்று 1909ம் ஆண்டு குடமுழுக்கு நடாத்தி சிவன் கடாட்சம் பெற்றுள்ளார்கள்.

1939 ஆம் ஆண்டு உலகயுத்தம் ஆரம்பித்த வேளையில் திருகோணமலையும் பாதிப்புக்கு உள்ளானது. இவ்வனர்த்தம் காரணமாக மக்கள் சிதறி வெவ்வேறு இடங்களை நாடி ஓடினார்கள். இதன் பிரதிபலிப்பு கோயில் கதவுகள் மூடிக் கொண்டன. கோயில் பாழடைந்து புதர்கள் மண்டிக் கிடந்தது. கோயில் நித்திய பூசைகளை சர்மாஜயா நடாத்தி வந்தார். 1939 ஆம் ஆண்டு மூடப்பட்ட கதவுகள் 18 ஆண்டுகளாகக் கவனிப்பற்று கைவிடப்பட்டது.

இந்நிலைமை தொடர அனுமதிக்கக் கூடாது, திருகோணமலைக்கு தீமைபயக்குமென அஞ்சிய திருகோணமலை சைவப்பெரியார்களும், அடியவர்களும் முன்னின்று மகேஸ்வரி சந்திரத்தில் முதலாவது ஆலோசனைக் கூட்டம் நடாத்தி விஸ்வநாதசுவாமி (கோயில்) பரிபாலனசபை அமைக்கப்பட்டது. அவன் அருளால் அவன்தான் வணங்கி அவர்கள் பாழடைந்த கோயிலை 1957 ஆம் ஆண்டுகுடமுழுக்கு நடாத்தி உயிர்க்கோயிலாக மாற்றினர்.

முதலாவது தலைவராக திரு. ராமலிங்கம், பொரளாளராக சின்னத்துரை, செயலாளராக பொன்னுச்சாமி, மணியகாரர்களாக அழககோன், எஸ்.ரி.அரசு ஆகியோரும் தெரிவானார்கள். இச்சபை உருவாக்க முன்னின்ற பெரியார்களை சைவஉலகமென்றும் மறக்க முடியாது, மறக்கவும் கூடாது. இராமலிங்கம், மு. பொன்னுசாமி, குமாரசாமி உடையார், டாக்டர். சின்னத்துரை, டாக்டர். சு.சிவானந்தம், சந்திரசேகரம்பிள்ளை, கனகசபாபதி, இராஜரெட்ணம், சுப்ரமணியம், தியாகராசா, எஸ்.ரி. அரசு, நாகரெட்ணம்,சின்னத்தம்பி, வைரமுத்து, சண்முகம், கந்தையா. இவர்கள் அனைவரும் எனது ஞாபகத்தில் பதிந்துள்ள உணர்வு பூர்வமான தொண்டர்கள் என்பதைக் கூறிபெருமையும் நன்றியும் சேர்க்க விரும்புகின்றேன். இவர்கள் அனைவரும் சிவபதம் அடைந்துவிட்டார்கள். இவர்கள் அனைவரும் எம்மத்தியில் அமரர்களாக வாழ்வார்கள்.

முறையாகநடைபெற்றபொதுச்சபையில் டாக்டர். சி. சிவானந்தம்,டாக்டர். தம்பிஜயா, கணேசலிங்கம் ஆகியோர் தலைவர்களாகவும், உப தலைவர்களாக மு. கோ. செல்வராசா அவர்களும், செயலாளராக சோமசுந்தரம், பத்மநாதன், டி.வி. ராஜசிங்கம், பொருளாளராக பொன்னையா, கனகசிங்கம், கருணாந்தசுவாமி ஆகியோர் காலத்திற்கு காலம் நடைபெறும் தெரிவாக இருந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

நித்திய ஆறுகால பூசைகளையும், கொடியேற்றவிழா போன்ற அனைத்து பூசைகளையும் சிறப்பாக நடத்திய பெருமை பெருமைக்குரிய சிவாச்சாரியார் சண்முகரெத்தினக் குருக்களுக்கு உரியது. அவரின் காலத்தில் சிவன் கோயில் அருள்ஒளி வீசியது. அவரின் நினைவு கோயில் உள்ளவரை நீடுநிலைபெறும்.

1983 ஆம் ஆண்டுக்குப் பின் திருகோணமலையில் நடைபெற்றவன்செயல்கள் நமது திருவிஸ்வநாதசுவாமி (சிவன்) கோயிலைப் பெரிதும் பாதித்தன. சமயக் கோட்பாட்டின் நிலைதவறி வேதனை மிகுந்த பல சம்பவங்கள் நடந்தன. அனைத்தையும் கெட்டகனவாக மறந்துவிடுவோம்.

மீண்டும் மூடியகோயில் கதவுகளை மெல்லமெல்ல திறக்கவேண்டும் என்பதில் அயலவர்களும் சைவமெய்யடியார்களும் பரிபாலனசபையினரும் காட்டிய விடாமுயற்சியின் காரணமாக திருப்பணிச்சபை அமைக்கப்பட்டது. தவசிலிங்கம் தலைவராகவும் கணேசலிங்கம் செயலாளராகவும் பொருளாளராக சுப்பிரமணியம் அவர்களும் தெரிவுசெய்யப்பட்டார்கள். திருகோணமலை நாடளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் வன்செயல் நட்டஈட்டை பெற்றுக்கொடுத்தார். சைவமக்களும் அயலவர்களும் வாரி வழங்கினார்கள் 24.06.1999 இல் குடமுழுக்கு கண்டுகண்குளிர்ந்தனர் சைவப்பெருமக்கள்.




அடியார்களின் உள்ளமே ஈசன் உவக்கும் மலர். உள்ளம் பெருங்கோயில். சிவபெருமானை உள்ளத்து இருத்தி, கைகூப்பி வழிபட்டு உய்வோமாக!

**- இராசையா சோமசுந்தரம் -**
**(முன்னாள் நகரசபை உறுப்பினர்)**

# திருக்கோணமலை விஸ்வநாத சிவன் கோவில்

## குடமுழுக்கு சிறப்பம்சம் 27-01-2022



## விசாலாட்சி சமேத விஸ்வநாத சிவனின் மகத்துவம்

### ஏழு தள இராஜ கோபுரத்துடன் கும்பாபிஷேகம்

சைவசமயம் தொன்மையானது. சிந்துவெளி நாகரீகத்தை ஆராய்ச்சி செய்த வெளிநாட்டவர்கள் (கி.மு. 300) சிவனை முதற் கடவுளாக கொண்ட சைவசமயம் வியாபித்திருந்ததை ஏற்றுக்கொண்டுள்ளனர். சிவனை விளித்துப் பாடுகையில் 'ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெரும் ஜோதி' என்றே முன்னவர் கூறியுள்ளனர். சிவனை சிவலிங்க ரூபத்தில் காண்பது தொன்மை மரபு. புராணங்களும் இதிகாசமும் போற்றிப்புகழும் தெட்சண கைலாயம் என்னும் திருப்பதி திருக்கோணமலையில்தான் உள்ளது. இந்தப் பதியில் உறையும் கோணைநாதனை விளித்துப் பாடுகையில் கோவிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த என்று திருஞானசம்பந்தப் பெருமான் பாடியதில் திருகோணமலையில் கோவில்கள் அதிகமிருந்தமை தெரிய வருகின்றது. அப்படி கோவில்கள் நிறைந்த திருகோணமலையின் மத்தியில் வீற்றிருந்து அடியவர்கட்கு அருள்பாலிக்கும் சிவன் உறையும் திருவிஸ்வநாதசுவாமி திருக்கோவில் சிறப்புகள்மிக்கது.

சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்பு காசியில் இருந்துவந்த சந்நியாசி தன்னுடன் கொணர்ந்த சிவலிங்கத்தைத் திருகோணமலையில் செங்கற்பண்ணை என்னும் வேப்பம் சோலையில் பிரதிஷ்டை செய்து வழிபட்டதே வரலாறு ஆகக் காணப்படுகின்றது. இந்த சிறுகோவில் காலத்திற்கு காலம் சைவ அடியார்களினால் விரிவாக்கப்பட்டு பல கும்பாபிஷேகங்கள் கண்டிருப்பது அறிய வருகின்றது.

ஆனாலும் 1983ம் ஆண்டில் இப்பிராந்தியத்தில் ஏற்பட்ட இனக்கலவரத்தின் போது விசமிகளால் இவ்வாலயம் சிதைக்கப்பட்டு 1985 கலவரத்தின் போது தேரும் எரிக்கப்பட்டது. சைவ அடியார்கள் 1983 இல் சிதைக்கப்பட்ட ஆலயத்தை கட்டியெழுப்ப 1984இல் பாலஸ்தாபனம் செய்திருந்தாலும் தொடர்ந்து வந்த கலவரங்களால் திருப்பணி வேலைகள் தொடர முடியாமற் போனது. ஆனாலும் சைவ அடியார்களின் பெரும் உழைப்பின் காரணமாக திருப்பணிவேலைகள் முடிக்கப் பெற்றன. 1999இல் இவ்வாலயம் கும்பாபிசேகம் முடிந்தாலும் ஆலயத்திற்கு இராஜகோபுரம் கட்டப் பட நிதிவசதி இல்லாததால் ஒரு 3 வாசல் இராஜகோபுரத்திற்கான வியாழமட்டமே கட்ட முடிந்தது. இராஜகோபுரம் இல்லாதது ஒரு பெரும் குறையாகவே காணப்பட்டது.

கும்பாபிஷேகத்தின் பின்பு ஏற்படுத்தப்பட்ட ஆலய அறங்காவலர்கள் சபை ஆலயத்திற்கு 7 வாசல் இராஜகோபுரம் அமைக்கும் திருப்பணியினை கையிலெடுத்த போதும் நிதி திரட்டல் மிகவும் சிரமமாகவே இருந்தது. ஆனாலும் முயற்சியை கைவிடாத சபையினரின் பெரும் முயற்சியினால் இப்போது 7 வாசல் இராஜ கோபுரத்துடனும் இருபக்கமும் மணிக்கோபு ரங்களுடனும் புதிய கொன்கிறீற் கூரையுடனானஸ்தம்ப மற்றும் சுற்று மண்டபங்களுடன் சுமார் 7 கோடி ரூபா செலவில் திருப்பணிகள் முடிவுற்று 27.01. 2022 இல் மகாகும்பாபிஷேகம் பொன்னாலை சிவஸ்ரீ சோமஸ்கந்தகுருக்கள் தலைமையில் நடைபெற முடிந்தது இறைவன் திருவருளேயாகும்.



இப்பாரிய திருப்பணியில் பங்குபற்றிய அடியவர்களும் இக்கும்பாபிசேகத்திற்கு கலந்து கொண்ட அடியவர்களும் எம்பெருமான் அருளால் எல்லா வளங்களையும் பெற்று இறைவனால் ஆசீர்வதிக்கப்படுவதற்கு பிரார்த்திக்கின்றேன்.

**- து. தவசிலிங்கம் -**
**(செயலாளர், சிவன் ஆலய அறங்காவலர் சபை)**

### திருகோணமலையின் பெருங்கோயில்

இந்துசமுத்திரத்தின் முத்தெனப் போற்றப்படும் இலங்கைத் திருநாட்டின் சிவபூமி எனசிறப்புப் பெறும் திருகோணமலையில் 200 வருட யாப்பு ரீதியான நிர்வாகக் கட்டமைப்புக் கொண்ட காசி விஸ்வநாதர் ஆலய ஆறாவது மகாகும்பாபிகேம் எனும் பெரும்சாந்திவிழாவிற்கு வாழ்த்துரை வழங்குவதை சிவபேறாக கருதுகிறேன்.

காசி விஸ்வநாதசுவாமி ஆலயமானது 1815 ஆம் ஆண்டு காசியிலிருந்து வந்த ஒரு துறவியினால் செக்கடித் தெருவிலுள்ள ஓர் இடத்தில் முதலில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. அதன் பின்னர் 1829 ஆம் ஆண்டு சொர்ணலிங்க முதலியார் என்பவரால் தற்போது ஆலயம் அமைந்துள்ள இடமான முன்பு செங்கற்பண்னை என்று அழைக்கப்பட்ட இடத்தில் (தற்போதுசிவபுரி) 11.5 ஏக்கர் குளத்துடன் கூடிய நிலப்பரப்பில் இவ்வாலயம் மீண்டும் பிரதிஷ்டை செய்யப்பட்டு முதலாவது கும்பாபிஷேகம் நடாத்தப்பட்டது.

1894 ஆம் ஆண்டு இவ்வாலயத்தில் விசாலாட்சி அம்மனும் பிரதிஷ்டை செய்யப்பட்டு இரண்டாவது கும்பாபிகேம் நடைபெற்றது. அன்று முதல் இவ்வாலய மூர்த்தி விசாலாட்சி சமேத காசி விஸ்வநாதர் எனப்போற்றப்படுகிறது. பின்னர் 1909 இல் மூன்றாவது கும்பாபிஷேகமும், 1957இல் நான்காவது கும்பாபிஷேகமும் நடைபெற்றன. 1983இல் இடம்பெற்ற உள்நாட்டு இனக் கலவரத்தில் கோயில்தேர் மற்றும் அலுவலகமும் எரிக்கப்பட்டன. இதன் பின்னர் சைவத்தமிழர்களால் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு 1999இல் ஐந்தாவது கும்பாபிஷேக குடமுழுக்கு இடம் பெற்றது. ஒரு சித்திரத் தேரையும் நிர்மாணித்து 11.07.2005 இல் வெள்ளோட்டம் நடைபெற்றது. இக்கோயிலில் வருடத்திற்கு இருமுறை தேர்வீதி உலாவருவது சிறப்பம்சமாகும்.

2011 ஆம் ஆண்டு தெரிவுசெய்யப்பட்ட ஆலய அறங்காவலர் சபையினர் இக்கோயிலை மீண்டும் புனர்நிர்மாணம் செய்யத் தீர்மானித்தார்கள். இதற்காக 2015.09.16 இல் இராஜ கோபுர நிர்மாணத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டு தற்போது மெய் சிலிர்க்கக்கூடிய வகையில் அழகான கோட்டை வாயில் போல கிழக்குமுக இராஜ கோபுர வாயிலும் கொண்ட தற்போதைய விஸ்வநாதசுவாமி (சிவன்) கோயில் திருகோணமலையிலே பெரியகோயில் ஆகும்.

எனது தலைமையில் அமைந்த கோயில் நிர்வாக சபையில் நிர்வாக முகாமைத்துவம், பொறியியல் துறை, நிதிமுகாமைத்துவம், தொழிநுட்பம் போன்ற பலதுறைகளில் நிபுணர்களினதும் மற்றும் சிவதொண்டு செய்யும் உறுப்பினர்களினதும் உள்ளத்தினாலேயே இந்த பிரமாண்டமான கோயிலைக் கட்டி முடிக்க சாத்தியமாயிற்று.

இக்கோயில் 71 அடி உயரமான ஏழுதள இராஜகோபுரமும், 31 அடி உயரமான மூலஸ்தான திரிதளவிமானமும், 31 அடி உயரமான கொடிக்கம்பத்துடன் கூடிய ஸ்தம்ப மண்டபமும், தெற்குவாசல் விசாலாட்சிஅம்மன் கோபுரம், தெற்குநோக்கிய விசாலமான வசந்தமண்டபமும், 30 அடி அகலமும் 20 அடி உயரமும் கொண்ட உள்சுற்றுப் பிரகாரமும் இக்கோயிலின் பிரமாண்டத்தைக் குறித்து நிற்கின்றன.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆறாவது கும்பாபிகே குடமுழுக்கு இன்று 27.01.2022இல் நடைபெற சிவனருள் கூடியுள்ளது. இவ்வாறான சமூக, சமய, பண்பாட்டு விடயங்கள் முன்னெடுக்கப்படும் போது ஆரோக்கியமான சமூகமொன்றை தோற்றுவிக்க, நாட்டில் ஏற்பட்ட இடர்பாடுகளிலிருந்து மீண்டெழுவதற்கு எமக்கு எப்போதும் துணைநிற்பது இறை நம்பிக்கையே ஆகும்.

இவ்வாலயம் தம்மாலான அனைத்தையும் ஆற்ற வேண்டும் எனவும், இவ்விழா சிறப்புடன் நடைபெறவேண்டும் எனவும் காசிவிஸ்வநாத சுவாமியின் பாதக் கமலங்களை பணிந்து எனது மனம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



**- க.செல்வராசா -**
**(தலைவர், அறங்காவலர் சபை, விஸ்வநாதசுவாமி(சிவன்)கோயில்)**

# நீதியமைச்சின் நடமாடும் சேவைக்கு வவுனியாவில் கடுமையான எதிர்ப்பு!

## மாவட்ட செயலகத்துக்குள் நுழைய முற்பட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள்!





வவுனியா மாவட்ட செயலக வளாகத்திற்குள் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் நுழைய முற்பட்ட போது பொலிஸார் அதனைத் தடுத்து நிறுத்தியதால் இரு பகுதியினருக்கு இடையில் முரண்பாடு ஏற்பட்டதுடன், பொலிஸார் குவிக்கப்பட்டதால் பதற்ற நிலை உருவாகாது.

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான விசாரணை உள்ளடங்கலாக நீதி அமைச்சின் நடமாடும் சேவை வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று (புதன்கிழமை) காலை இடம்பெற்றது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து வவுனியா மாவட்ட செயலகம் முன்பாக காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் ஆர்ப்பாட்டம் ஒன்றும் முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா மாவட்ட செயலகம் முன்பாக ஒன்று கூடிய காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், 'நீதி அமைச்சால் நீதி கிடைப்பதில்லை', 'கால அவகாசம் வேண்டாம் நீதி தான் வேண்டும்', 'செயல் திறன அற்ற ஓ எம் பி யை நம்பி காலத்தை கடத்தாது இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதி மன்றத்தில் பாரப்படுத்துங்கள்' என எழுதப்பட்ட பதாதைகளையும், காணாமல் ஆக்கப்பட்டோரின் புகைப்படங்களையும் தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் அங்கு பதற்ற நிலை காணப்பட்டது.

## ஊழல் மதிப்பாய்வுச் சுட்டியில் இலங்கை 102 ஆவது இடம்

ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெனல் சர்வதேச நிறுவனத்தால் தொகுக்கப்பட்ட 2021 ஆம் ஆண்டுக்கான ஊழல் மதிப்பாய்வுச் சுட்டியில் இலங்கை 102 ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

ஒரு தசாப்தகாலமாக ஊழல் நிலையில் எவ்வித முன்னேற்றகரமான மாற்றங்களையும் அடையவில்லை என்பதை 2021 ஆம் ஆணடுக்கான ஊழல் மதிப்பாய்வுச் சுட்டி வெளிப்படுத்துகின்றது.

ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெனல் சர்வதேச நிறுவனத்தால் தொகுக்கப்பட்ட சமீபத்திய ஊழல் மதிப்பாய்வுச் சுட்டி நேற்று வெளியிடப்பட்டது.

சிபிஐ ஆனது, உலகெங்கிலுமுள்ள 180 நாடுகள் மற்றும் ஆட்சி எல்லைக்குள் இடம்பெறுகின்ற பொதுத் துறை ஊழல்களின் அடிப்படையில் மதிப்பாய்வு செய்யப்படுகின்றது.

இங்கு வழங்கப்பட்ட புள்ளிகளானவை நிபுணர்களின் கருத்துக்களையும் வர்த்தக சமூகத்தினரின் கருத்துக் கணிப்புக்களையும் பிரதிபலிக்கிறது.

உலக வங்கி, உலகப் பொருளாதார மன்றம், தனியார் இடர் மற்றும் ஆலோசனை வழங்கும் நிறுவனங்கள், சிந்தனைக் குழுக்கள் உட்பட 13 வெளிவாரியான தரவுகளைப் பயன்படுத்தியே சிபிஐ மதிப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

சிபிஐ மதிப்பாய்வு அதன் புள்ளி வழங்கும் முறையை 0 தொடக்கம் 100 வரை வடிவமைத்துள்ளது. 100 புள்ளிகள் என்பது ஊழலற்ற தூய்மையான நிலையையும் 0 புள்ளி என்பது கூடிய ஊழல் நிலையையும் குறிப்பிடுகிறது.

2021 ஆம் ஆண்டிற்கான சிபிஐ மதிப்பாய்வில் இலங்கைக்கு 37 புள்ளிகள் வழங்கப்பட்டுள்ளது. இது முன்னைய ஆண்டை விட ஒரு புள்ளி குறைவானதாகும். அதனடிப்படையில் தரவரிசையில் 2020 ஆம் ஆண்டு 94 ஆம் இடத்திலிருந்த இலங்கை 2021 ஆம் ஆண்டு 102 ஆம் நிலைக்கு வீழ்ச்சி கண்டுள்ளது.

கடந்த 10 ஆண்டுகளில் இலங்கையின் சிபீஐ மதிப்பாய்வு ஒப்பீட்டளவில் ஒரே மாதிரியாகவே காணப்படுகிறது. 2016 ஆம் ஆண்டு பதிவாகிய 36 புள்ளிகள் குறைந்த மதிப்பீடாகவும் 2012 ஆம் ஆண்டு பதிவாகிய 40 புள்ளிகள் இலங்கையின் அதிகபட்ச புள்ளியாகவும் விளங்குகிறது.

ஊழல் மதிப்பாய்வுச் சுட்டியில் பொதுத் துறை ஊழல் வகைகளாக இலஞ்சம், பொது நிதியின் தவறான பயன்பாடு, ஊழல் தொடர்பிலான வழக்குகளைத் திறம்பட விசாரணை செய்யும் தன்மை, போதுமான சட்டக் கட்டமைப்புக்கள், தகவல் அணுகுவதற்கான வாய்ப்பு மற்றும் முறைகேடுகளை வெளிப்படுத்துவோர், ஊடகவியலாளர்கள் மற்றும் புலனாய்வாளர்களுக்கான சட்டப் பாதுகாப்புகளின் தன்மை என்பனவே உள்ளடக்கியுள்ளன.

இலங்கையின் ஊழலுக்கெதிரான ஒட்டுமொத்த செயற்பாடுகளும் ஸ்தம்பித்த நிலையிலேயே காணப்படுகின்றன எனவும் கடந்த 10 ஆண்டுகளில் 86 சதவீதமான உலக நாடுகளில் ஊழலுக்கெதிராக எந்த முன்னேற்றமும் அடையப்படாத நிலைமையே காணப்படுவதாக ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெனல் நிறுவனம் குறிப்பிடுகிறது.

சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தல் மற்றும் பொறுப்புக்கூறல் செயற்பாட்டிலிருந்து விலகுதல் போன்ற அடிப்படை விடயங்களிலிருந்து விடுபட உலகளாவிய கொவிட் - 19 தொற்றுப்பரவலை உலகிலுள்ள பல நாடுகள் தமக்கு சாதகமாகப் பயன்படுத்துகின்றன என ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெனல் நிறுவனம் குறிப்பிடுகிறது.

அது தொடர்பில் மேலும் குறிப்பிட்டவை வருமாறு :-

அநாமதேயமான ல் நிறுவனங்களின் துஷ்பிரயோகங்களைத் தடுப்பதற்காக சர்வதேசத்தின் வேகம் அதிகரித்துள்ள போதிலும் ஒப்பீட்டளவில் 'தூய்மையான' பொதுத் துறைகளைக் கொண்ட அதிகப்படியான புள்ளிகளைப் பெற்ற பல நாடுகள் கடல் கடந்த ஊழல்களைத் தொடர்ந்தும் செயற்படுத்துகின்றன.

சிபிஐ மதிப்பாய்வில் அதிக மற்றும் குறைந்த புள்ளிகளைப் பெற்ற நாடுகளின் வரிசை, டென்மார்க் (88), பின்லாந்து (88), நியூஸிலாந்து (88) அதேபோல் சோமாலியா (13) தென் சூடான் (11).

ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெனல் சிறலங்கா நிறுவனம் ஊழலுக்கு எதிராகவும் நல்லாட்சியை மேம்படுத்துவதன் மூலம் ஊழலற்ற நாட்டைக் கட்டியெழுப்ப சர்வதேச ரீதியாக செயற்படும் ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெனல் சர்வதேச நிறுவனத்தின் உள்நாட்டு அமைப்பாகும்.

அதேவேளை மேற்குறிப்பிட்டவாறு இந்த சிபிஐ வருடாந்த ஆய்வுக்காக ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெனல் நிறுவனத்தால் இலங்கை தொடர்பிலான தரவுகள் ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெனல் சிறி லங்கா நிறுவனத்திற்கு வெளியே பெறப்பட்டவையாகும்.

## வாகன இறக்குமதிக்கு அனுமதிக்குக வர்த்தகர்கள் மீள அரசை வலியுறுத்து

வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதிக்குமாறு வர்த்தகர்கள் மீண்டும் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

இறக்குமதி நிறுத்தப்பட்டதன் மூலம் பயன்படுத்தப்பட்ட வாகனங்களின் விலை இரண்டு, மூன்று மடங்காகவும் அதிகரித்துள்ளதாக வர்த்தகர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

முதன்முறையாக வாகனம் வாங்கும் கனவில் இருந்த மக்கள் தற்போது பெரும் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளனர்.

மின்சார வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படும் என ஜனாதிபதி அண்மையில் தெரிவித்திருந்தார். நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவும் இதனைத் தெரிவித்துள்ளார்.

டொலர் பரிவர்த்தனை கட்டுப்பாட்டு நடவடிக்கையாக, அரசாங்கம் வாகன இறக்குமதியைக் கட்டுப்படுத்தியுள்ளது. அதிகரித்துள்ள டொலர் பற்றாக்குறையால், வாகனங்களை இறக்குமதி செய்வதில்லை என்ற முடிவிற்கும் அரசாங்கம் வந்துள்ளது.

வாகன இறக்குமதி நடவடிக்கை, அரசாங்கத்திற்கு வரி வருவாயைப் பெற்று தரும் முக்கிய விடயமாக உள்ளதென வாகன இறக்குமதியாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். பயன்படுத்திய வாகனங்களை இரண்டு மூன்று மடங்கு அதிக விலையில் விற்பனை செய்தாலும் அரசாங்கத் துக்கு எவ்வித பயனுமில்லை. இதனால் ஏப்ரல் மாதத்துக்குள் வாகனங்களை இறக்குமதி செய்ய சந்தர்ப்பம் வழங்குமாறு வர்த்தகர்கள் குறிப்பிட்டுள்ளனர்.



## சபுகஸ்கந்தவின் செயற்பாட்டை மீள ஆரம்பிப்பது மேலும் தாமதம்

சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் செயற்பாடுகளை மீள ஆரம்பிப்பது மேலும் தாமதமாகும் என எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், ஜனவரி 30 ஆம் திகதிக்கு முன்னர் இந்தப் பணிகளை ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளதாக அமைச்சின் செயலாளர் கே.டி.ஆர். வொல்கா தெரிவித்தார்.

கச்சா எண்ணெய் கொள்வனவுக்கான அமெரிக்க டொலர் தட்டுப்பாடு காரணமாக, ஜனவரி 03 ஆம் திகதி முதல் சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டது.

இது, இன்று முதல் மீண்டும் இயங்கும் என முன்னர் அறிவிக்கப்பட்ட நிலையில் இலங்கைக்கு வரும் கச்சா எண்ணெயில் சில தாமதங்கள் ஏற்பட்டுள்ளன.

இதன் காரணமாக எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் செயற்பாடுகளை மீள ஆரம்பிக்க முடியவில்லை என்று தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சிங்கப்பூரைத் தளமாகக் கொண்ட எரிசக்தி நிறுவனத்தால் அனுப்பப்பட்ட கச்சா எண்ணெய் ஜனவரி 24 ஆம் திகதி நாட்டுக்கு வரவிருந்தது.

ஆனால், இந்தக் கப்பல், புதன் கிழமையே கொழும்பு துறைமுகத்தை வந்தடையும் என எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# நீதி அமைச்சின் வடக்குக்கான முதலாவது நடமாடும் சேவை வவுனியாவில் ஆரம்பம்



(வவுனியா நிருபர்)

நீதி அமைச்சின் வடக்கு மாகாணத்துக்கான முதலாவது நடமாடும் சேவை வவுனியாவில் நேற்று நடைபெற்றது.

நீதி அமைச்சு மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் ஊடான சேவைகளைப் பொதுமக்களுக்கு வழங்குவதற்காக நாடளாவிய ரீதியில் 'நீதிக்கான அணுகல்' எனும் விசேட நடமாடும் சேவை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அதன் ஒரு கட்டமாக வடக்கு மாகாணத்துக்கான முதலாவது நடமாடும் சேவை வவுனியா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நீதிச் சேவை ஆணைக்குழுவின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் ரோகிணி கெட்டிகே தலைமையில் நேற்று காலை 9.30 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை இடம்பெற்றது.

இதன்போது, பொதுமக்களைப் பாதிக்கும் சட்டங்கள் குறித்து பொதுமக்களுக்கு அறிவூட்டல், நல்லிணக்கம் குறித்து மக்களுக்குத் தெளிவுபடுத்துதல், வடக்கு மாகாண மக்களின் காணிப் பிரச்சினைகளுக்கான தீர்வு தொடர்பில் ஆலோசனை வழங்கல், பிறப்பு - திருமணம் மற்றும் இறப்பு சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளுதல், காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் சேவைகளை வழங்குதல் என்பன முன்னெடுக்கப்பட்டன.

நீதி மற்றும் சிறைச்சாலை அமைச்சுக்களின் கீழுள்ள காணோமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் சேவை நிலையம், இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு, இலங்கை மத்தியஸ்தர் சபைகள் ஆணைக்குழு, இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் உள்ளிட்ட பல அரச நிறுவனங்கள் கலந்துகொண்டு மக்களுக்கும் அரச அதிகாரிகளுக்கும் ஆலோசனைகளை வழங்கியமையுடன் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழிவகைகள் குறித்தும் தெளிவுபடுத்தினர்.

நிகழ்வில் நீதிச் சேவை ஆணைக்குழு பணிப்பாளர் சந்திக்க லொக்கு கெட்டி, நீதிச் சேவை ஆணைக்குழுவின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் ரோகிணி கெட்டிகே, நீதிச் சேவை ஆணைக்குழுவின் உதவிச் செயலாளர் சந்திர மாலனி, இழப்பீட்டு அமைச்சின் பணிப்பாளர் நாயகம் நாசிமா அகமட், வவுனியா மாவட்ட அரச அதிபர் பீ.ஏ.சரத் சந்திர ஆகியோர் கலந்துகொண்டனர். (100)

## சம்பிக்கவின் திட்டம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சம்பிக்க ரணவக்கவின் உண்மையான திட்டம் என்னவென்று எனக்குத் தெரியாது. ஆனால், நான்தான் எதிரணியின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளர்.

கடந்த தடவை ஜனாதிபதித் தேர்தலின்போது எதிரணிகளுக்குள் ஒற்றுமை இல்லாத காரணத்தால் எனக்கான வாக்குகள் சிதறின. இதனால் கோட்டாபய ராஜபக்ஷ வெற்றிவாகை சூடினார்.

அடுத்த தடவை கோட்டாபய ராஜபக்ஷவோ அல்லது வேறெந்த ராஜபக்ஷவோ ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கினால் வீழ்த்தியே தீருவேன்.

நாட்டு மக்கள் இன்று ஐக்கிய மக்கள் சக்தியின் பக்கமே உள்ளனர். அவர்கள் நாட்டுக்கான புதிய தலைவரைத் தேடுகின்றனர். அவர்களின் விருப்பத்துக்கிணங்க நான் அடுத்த தடவையும் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடுவேன். மக்களின் அமோக ஆதரவுடன் வெற்றியடைவேன் என்ற நம்பிக்கை எனக்கு நூறு வீதம் உண்டு - என்றார்.



# 73ஆவது இந்தியக் குடியரசு தின நிகழ்வு யாழில்

73 ஆவது இந்தியக் குடியரசு தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரக அலுவலகத்தில் நேற்று காலை 9 மணிக்கு நிகழ்வுகள் நடைபெற்றன.

# கற்பிட்டியில் கரையொதுங்கிய சடலம் வெளிநாட்டவருடையதா?



கற்பிட்டி, கண்டக்குளி கடற்கரைப் பகுதியில் இனந்தெரியாத நபர் ஒருவரின் சடலம் நேற்றுமுன்தினம் மாலை கரையொதுங்கியுள்ளது எனக் கற்பிட்டிப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தப் பகுதியில் சடலம் ஒன்று காணப்படுகின்றது என மீனவர் ஒருவர் கற்பிட்டிப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளார்.

அந்தப் தகவலில் அடிப்படையில் சம்பவ இடத்துக்கு விஜயம் செய்த கற்பிட்டிப் பொலிஸாரும், பொலிஸ் தடயவியல் பிரிவினரும் இணைந்து அது தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

இவ்வாறு கரையொதுங்கிய சடலம் அடையாளம் காண முடியாத வகையில் உருக்குலைந்து காணப்படுகின்றது எனப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

அத்துடன், அந்தச் சடலம் வெளிநாட்டவர் ஒருவருடையதாக இருக்கலாம் எனத் தாம் சந்தேகிக்கின்றார்கள் எனவும், எனினும் அது தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் கூறினர்.

இவ்வாறு உருக்குலைந்த நிலையில் கரையொதுங்கிய இந்தச் சடலம் நீதிவான் விசாரணையின் பின்னர் பிரேத பரிசோதனைக்காக புத்தளம் தள வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

## கொடுங்கோல் ஆட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

'ஐக்கிய மக்கள் சக்தியின் மூச்சு' மற்றும் 'ஜனசுவய' ஆகிய நிகழ்ச்சித் திட்டத்துடன் ஒன்றிணைந்தாக பொரலஸ்கமுவ வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு நேற்று ஓட்டோ வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசின் வேலையை அரசு செய்வதும், எதிர்க்கட்சிகள் எதிர்கட்சிகளின் வேலைகளைச் செய்வதுமே பொதுவாக நடப்பதாக இருந்த போதிலும், ஐக்கிய மக்கள் சக்தி இந்த நாட்டின் ஒட்டுமொத்த மக்களின் நலனுக்காகப் பாரம்பரிய எதிர்க்கட்சி என்ற வகிபாகத்தைப் புரட்டிப் போட்டுள்ளது.

நாட்டின் அனைத்து வளங்களையும் விற்று, மக்களைத் துன்பத்துக்கு மேல் துன்பத்தை ஏற்படுத்துவதையே அரசு செய்து வருகின்றது என்ற போதிலும், ஐக்கிய மக்கள் சக்தி தொடர்ந்து நாட்டுக்குப் பெறுமானம் சேர்க்கும் செயற்பாடுகளையே மேற்கொண்டு வருகின்றது.

அந்தப் பணியில் இணைந்து, மக்களுக்குச் செய்யக்கூடிய சேவையை செயலில் நிரூபிக்க வேண்டும் என அதிகாரத்தைப் பெறக் கனவு காணும் அனைத்துக் கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கின்றேன். அவ்வாறு செய்யாமல் பெருமை பேசுவதில் அர்த்தமில்லை.

கொரோனாப் பேரிடர் காரணமாக உலகம் முழுவதும் வறுமையின் அடிமட்டத்துக்குச் சென்று கொண்டிருக்கும் போதிலும் உலகின் பத்து பெரும் பணக்காரர்களின் சொத்துக்கள் அதிகரித்துள்ளன. இலங்கையிலும் இதே நிலைதான் உள்ளது.

நாட்டில் உள்ள அரச சொத்துக்களை விற்பனை செய்வதே இப்போது நடப்பதாக இருந்தாலும், நாட்டுக்குப் பெறுமானம் சேர்ப்பதையே நாங்கள் செய்கின்றோம் - என்றார்.

## பெண்ணின் சடலம்: ஒருவர் சிக்கினார்!

பதுளை, 6 ஆம் கட்டை பகுதியில் வயோதிபப் பெண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில், ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொலிஸார் முன்னெடுத்த விசாரணையில் சந்தேகநபர் வெளஸ்ஸ தோட்டப பகுதியில் கைதுசெய்யப்பட்டுள்ளார். கைதானவர் வெவெஸ்ஸ தோட்டத்தைச் சேர்ந்த 30 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பதுளை - 6 ஆம் கட்டை பகுதியில் உள்ள தேயிலை தோட்டத்தில் இருந்து 60 வயதான பெண் ஒருவர் கடந்த செவ்வாய் சடலமாக மீட்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸ் விசாரணைகள் தொடர்கின்றன.




# தாதியர்கள், சுகாதார பரிசோதகர்கள் மேல்மாகாணத்தில் பணிப்புறக்கணிப்பு

மேல் மாகாணத்தில் உள்ள வைத்தியசாலைகளின் தாதியர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் குடும்பநல வைத்திய அதிகாரிகள் ஆகியோர் பணிப்புறக்கணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

அதன்படி, பதவி உயர்வு உள்ளிட்ட 7 கோரிக்கைகளை முன்னிறுத்தி நேற்று (புதன்கிழமை) காலை முதல் 24 மணிநேர அடையாள பணிப்புறக்கணிப்பை முன்னெடுத்துள்ளனர்.

பதவி உயர்வில் காணப்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக சுகாதார அமைச்சரால் அமைச்சரவை அனுமதி பெறப்பட்டதாகவும் எவ்வாறாயினும் குறித்த அமைச்சரவை அனுமதியில் காணப்பட்ட பிரச்சினை காரணமாக 13 ஆயிரம் தாதியர்களுக்கான பதவி உயர்வு இல்லாமல் போயுள்ளதாகவும் சுகாதாரத் துறையினர் குற்றஞ்சாட்டுகின்றனர்.

குறித்த கோரிக்கைகளை முன்னிறுத்தி அவர்கள் இதற்கு முன்னரும் பணிப்புறக்கணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## பொலிஸ் கான்ஸ்டபிள் உட்பட நால்வர் விபத்துக்களில் சாவு

நாட்டின் பல பகுதிகளில் இடம்பெற்ற வாகன விபத்துக்களில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் உட்பட நால்வர் உயிரிழந்துள்ளனர்.

தலங்கம பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கொஸ்வத்தை டென்சில் கொப்பேகடுவ மாவத்தையில் மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு அருகில் இடம்பெற்ற வாகன விபத்தில் 27 வயதான பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி கவிழ்ந்து விபத்துக்கு உள்ளாகி உயிரிழந்தார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

உயிரிழந்தவர் கரந்தகொல்ல பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனவும், மேல் மாகாண தெற்கு போக்குவரத்துப் பிரிவில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் எனவும் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இதேவேளை, மீகொட பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நாவலமுல்ல - லெனகல வீதியின் நாவலமுல்ல பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் 48 வயதுடைய நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

லெனகல நோக்கி பயணித்த ஓட்டோ கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி விபத்துக்கு உள்ளாகி உள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, திம்புலபத்தனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மவுண்ட்வர்நாத்தின் மேல் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் 37 வயதுடைய நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து கடந்த செவ்வாய்க்கிழமை மாலை இடம் பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, வெலிகேபொல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கபுகல ரஜவக வீதியில் டிப்பர் வாகனம் தொழில்நுட்ப கோளாறு காரணமாக கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி மரத்தில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் பலாங்கொடை, மகுனமலை பகுதியைச் சேர்ந்த 50 வயதுடைய ஒருவர் உயிரிழந்துள்ளார்.

## முல்லையில் திடீரென தாழிறங்கிய வீதி பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுப்பு




முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு வீதியில் முதன்மையான பாலமாகக் காணப்படும் வட்டுவாகல் பாலம் நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றது.

பாலத்தில் அவ்வப்போது ஏற்படும் வெடிப்பு மற்றும் பாதிப்புக்கள் சீர்செய்யப்பட்டு வருகின்ற நிலையில் தற்போது பாலத்தில் ஒரு பகுதியில் வீதி தாழிறங்கிய நிலையில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்த வீதியினை பயன்படுத்தும் சாரதிகள், கடற்தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் அவதானமாக பயணிக்குமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், நீண்டகாலமாகக் குறித்த பாலம் புனரமைக்கப்படாத நிலையில் தொடர்ச்சியாக கடற்தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்கள் இந்தப் பாலத்தைப் புனரமைத்துத் தருமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஆயுர்வேத வைத்தியசாலை நாவாந்துறையில் திறப்பு!



யாழ்ப்பாணம் நாவாந்துறை பகுதியில் உள்ள ஆயுர்வேத வைத்தியசாலையை யாழ்.மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் நேற்று (புதன்கிழமை) திறந்து வைத்தார்.

யாழ்.மாநகரசபை உறுப்பினர் நீ.பிலிப்பின் வட்டார நிதி ஒதுக்கீட்டில், குறித்த ஆயுர்வேத வைத்தியசாலை புனரமைக்கப்பட்ட நிலையில், மாநகர ஆணையாளர் இ.த. ஜெயசீலன் தலைமையில் திறப்பு விழா இடம்பெற்றது.

இந்த நிகழ்வில், யாழ்.மாநகர சபை உறுப்பினர்கள் மற்றும் மாநகர பிரதி ஆணையாளர், செயலாளர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.


## பல பில்லியன் ரூபா மக்கள் பணம் நாசம்

கொழும்பு, ஜன. 27

தேவையற்ற நேரத்தில் புதிய ரயில் பெட்டிகளை இறக்குமதி செய்ததன் மூலம் பல பில்லியன் ரூபா பொது மக்களின் பணம் வீணடிக்கப்பட்டுள்ளதாக ரயில் தொழிற்சங்கக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது ரயில் தொழிற்சங்க கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் ஏ.எஸ்.விதானகே இதனைத் தெரிவித்தார்.

## புத்தளம் - கற்பிட்டியில் சடலம் மீட்கப்பட்டது



கற்பிட்டி, கண்டக்குளி கடற்கரைப் பகுதியில் இனந்தெரியாதநபர் ஒருவரின் சடலமொன்று கடந்த செவ்வாய்க்கிழமை மாலை கரையொதுங்கியுள்ளது எனக் கற்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தப் பகுதியில் சடலமொன்று கிடப்பதாக மீனவர் ஒருவர் கற்பிட்டி பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளார். மேற்படி தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்துக்கு விஜயம் செய்த கற்பிட்டி பொலிஸாரும், பொலிஸ் தடயவியல் பிரிவினரும் இணைந்து அதுதொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

இவ்வாறு கரையொதுங்கிய சடலம் அடையாளம் காண முடியாத வகையில் உருக்குலைந்து காணப்படுவதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

அத்துடன், குறித்த சடலம் வெளிநாட்டவர் ஒருவருடையதாக இருக்கலாம் என தாம் சந்தேகிப்பதாகவும் எனினும் அதுதொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் கூறினர்.

இவ்வாறு உருக்குலைந்த நிலையில் கரையொதுங்கிய சடலம் நீதிவான் விசாரணையின் பின்னர் பிரேத பரிசோதனைக்காக புத்தளம் ஆதார வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் பொலிஸ் அத்தியட்சகரின் ஆலோசனையில் கற்பிட்டி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் நிசாந்த குமார தலைமையிலான பொலிஸ் குழுவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வானும் பஸ்ஸும் நேருக்கு நேர் மோதி வயோதிபப் பெண் சாவு; ஐவர் படுகாயம்

மொனராகலை தனமல்விலைப் பகுதியில் நேற்று (புதன்கிழமை) வானொன்றும், தனியார் பஸ்ஸொன்றும் நேருக்கு நேர் மோதி விபத்திற்குள்ளாகியதில் வயோதிபப் பெண்ணொருவர் பலியானமையுடன், ஐந்து பேர் படுகாயமடைந்துள்ளனர் எனத் தனமல்விலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் மொனராகலை தனமல்விலைப் பகுதியின் கித்துல் கோட்டை என்ற இடத்தில் நேற்று (புதன்கிழமை) இடம்பெற்றது.

இந்த விபத்தில் ரன்ஜனி வீரசிங்க என்ற 65 வயதுடைய பெண் உயிரிழந்துள்ளார்.

இதையடுத்து குறித்த பெண்ணின் சடலம் தற்போது, தனமல்விலை அரசினர் வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

அத்தோடு படுகாயமடைந்த ஐந்து பேரும், தனமல்விலை அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஏழு பேர் வானொன்றில் மிந்தெனியவில் இடம்பெற்ற மரணக்கிரியை ஒன்றில் கலந்து கொண்ட பின், மீளவும் தனமல்விலைக்கு வீடு நோக்கி திரும்பு கையிலேயே, இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

இந்நிலையில், விபத்தில் உயிரிழந்த பெண்ணின் கணவரே, வானை செலுத்தியுள்ளார். இவர்களது இரு மகள்கள் மற்றும் மூன்று பேரப்பிளைகள் ஆகியோரே, மரணக் கிரியைகளில் கலந்துகொண்டு திரும்பியவர்களென ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

தனமல்விலைப் பொலிஸார் மேற்படி விபத்து தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

அத்துடன், விபத்திற்குள்ளான தனியார் பஸ் சாரதி, பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணையின் பின்னர் மொனராகலை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்படவுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

## இலங்கை மின்சார சபையின் தலைவர் நெருக்கடிக்கு மத்தியில் பதவி விலகல்!



நாட்டில் மின்சார விநியோகத்திற்கு கடும் நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில், இலங்கை மின்சார சபையின் தலைவர் எம்.எம்.சி. பேர்டினண்டோ பதவி விலகுகிறார் என அறிவித்துள்ளார்.

அதன்படி, எதிர்வரும் முதலாம் திகதி முதல் தான் பதவி விலகவுள்ளார் என, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அவர் கடிதம் அனுப்பியுள்ளார்.

பல தடவைகள் மின்சார சபையின் தலைவராகப் பதவி வகித்த எம்.எம்.சி.பேர்டினாண்டோ, யுகதனவி மின் உற்பத்தி நிலையத்தின் அரசாங்கத்துக்குச் சொந்தமான பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்கு மாற்றுவதற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதையடுத்து, பெரும் சர்ச்சைக்கு உள்ளானார்.

இத்கு மின் பொறியாளர்கள் மற்றும் ஏனைய ஊழியர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.01.2022இல் வெளியிடப்பெற்றது.